

வரலாற்றெழுத்தியல்

செ.திவான்

ஆசிரியரின் 100வது நூல்

வரலாற்றெழுத்தியல்

வரலாற்றாசிரியர் **செ.திவான்**, எம்.ஏ.,எம்ஃபில்.,

சுஹைனா பதிப்பகம்

106F, 4A, திருவனந்தபுரம் சாலை, நெல்லை,
பாளையங்கோட்டை – 627002 போன்: 0462-2572665

பதிப்பு ஆண்டு: 2016, செப்டம்பர்	பக்கங்கள்: 40, விலை: ரூ.20
வடிவமைப்பு: ஐ.அப்துல் நசீர்	அச்சிட்டோர்: சிவசக்தி ஆர்ட்ஸ்
ஓவியம்:அ.செல்வம்	புகைப்படம்: பா.கதிர்

எண்ண அலைகள்

இந்திய சுதந்திரப்போரில் முஸ்லிம்களின் தியாக வரலாறு எளியேனால் முழுமையாக இன்னும் சொல்லப்படவில்லை. இதுவரை அது குறித்து 2000 பக்கங்கள் எளியேன் முயற்சியால் வந்துள்ளது. இதுபோல இன்னும் 2000 பக்கங்கள் வரவேண்டியுள்ளது. அதற்குள் கால் எலும்பு முறிந்துவிட்டது. 99 புத்தகங்கள் வெளிவந்துள்ள நிலையில் 100வது புத்தகம் வராமல் போய்விடக்கூடாதே என்ற ஆதங்கத்தில் இச்சிறிய நூலை வெளியிட்டுள்ளேன். எதிர்காலத்தில் பொருள் வளமும், மனவளமும், உடல் வளமும், உதவி செய்வார் வளமும் அமைந்தால் தொடர்ந்து எழுதுவேன். இறைவனே போதுமானவன்.

எவ்வளவோ எழுதிட ஆசை; எழுத்து ஆசைக்காக அல்ல,
எழ வேண்டிய சமுதாயத்தின் உள்ளத்தில் விழ வேண்டிய கருத்துக்கள் ஏராளம்
எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை; எழுதுவதற்காகவே வாழ்கிறேன்.

1.9.2016 பாளை **செ.திவான்**

அகிலத்தின் அருட்கொடையாகத் தோன்றிய இஸ்லாம் மார்க்கத்தின் கொள்கைகளைத் தாங்கி வெளிவரும் சமநிலைச் சமுதாயம் எனும் மாத இதழ் சார்பில் மௌலவி. ஜாபர் சாதிக் பாகவி, கொ.நதீம் (ஆதித்தமிழ்மகன்) வழக்கறிஞர் க.முஸ்தாக் அகமது ஆகியோர் எழுத்தாளர், வரலாற்றாசிரியர் செ.திவான் அவர்களிடம் நடத்திய நேர்காணலின்போது..........

✶ **தங்களைப் பற்றிய சிறு அறிமுகம் மற்றும் வரலாற்று எழுத்தியலில் ஆர்வம் எப்படி வந்தது என்பதிலிருந்து தொடங்குவோமா? இத்துறைக்குள் போக வேண்டுமென ஆசைப்பட்டீர்களா?**

✱✱திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலிச் சீமையில், செங்கோட்டை இரயிலடியில் (விசுவநாதபுரம், பின்கோடு: 627810) விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த நா.செய்யது மசூது – செ.காசினம்மாள் பீவி புதல்வனாக 01.09.1954 இல் பிறந்தவன். எட்டாம் வகுப்பு வரை செங்கோட்டை இரயிலடி சமீபம் அமைந்துள்ள எம்.எம்.நடுநிலைப்பள்ளியிலும் ஒன்பதாம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரை செங்கோட்டை எஸ்.எம்.எஸ்.எஸ். அரசு உயர்நிலைப்பள்ளியிலும் படித்தேன். 1971இல் பியுசி எனும் புகுமுகவகுப்பு பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் துவக்க ஆண்டில் பயின்றேன். தூய யோவான் கல்லூரி (பாளை) யில் பி.ஏ. வகுப்பை நிறைவு செய்தேன். தீவிர திராவிட அரசியலில் பங்கேற்றேன். அப்போது ஓய்வு வேளையில் எம்.ஏ. (1979) வகுப்பை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழிக் கல்வி மூலம் பயின்றேன். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழத்தில் துவக்க ஆண்டில் (1989) எம்.பில். பயின்றேன். 'இந்திய வரலாற்றில் தீவிரவாதம், ஆஷ் கொலை' எனும் ஆய்வேட்டைச் சமர்ப்பித்தேன். அரசியல் ஈடுபாட்டால் ஆய்வேட்டைச் சமர்ப்பித்திட ஏற்பட்ட காலதாமதத்தால் பல்கலைக்கழக தங்கப்பதக்கத்தைப் பெறும் வாய்ப்பை இழந்தேன். தற்போது மீண்டும் தமிழகத்தில் இஸ்லாம் பரவியது குறித்த விரிவான ஆய்வை பாளையங்கோட்டை சதக்கத்துல்லா அப்பா கல்லூரியில் ஆய்வு செய்திடும் மாணவனாகவே உள்ளேன். வயதோ 63 பிறக்கிறது.

"யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாதவாறு"– திருக்குறள் 397

சாகும் வரை கல்வி கற்க வேண்டும் என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப இன்றும் தொடர்ந்து படித்து வருகிறேன். எனது துணைவியார் டாக்டர் திவானி ஜஹானரா. எனக்கு இரு பிள்ளைகள் நஜாத், சுஹைனா. எனது பேரன் ரெகான் சுலைமான் மேல் அதிகப்பிரியம் உண்டு. சிறு அறிமுகம் போதுந்தானே!

கேள்வி 1: **வரலாற்றெழுத்தியலில் ஆர்வம் எப்படி வந்தது?**

நல்ல கேள்வி. அடியேன் முன்னர் கூறியதுபோல எம்.ஏ. வகுப்பினை அஞ்சல் வழிக் கல்வி மூலம் பயின்று வரும் வேளை. முக்கியப் பாடங்களைக் குறித்து சில வகுப்புகளை பேராசிரியர்கள் வந்து பாடம் எடுப்பார்கள்.

எம்.ஏ. வகுப்பில் இந்திய சுதந்திரப் போராட்டம் குறித்து ஒரு பேப்பர். இது அல்லது இது என்ற அடிப்படையில் ஐந்து கேள்விகள். தலா 30 மதிப்பெண்கள். 150க்கு 75 மார்க் வாங்கினால் மட்டுமே தேர்ச்சியடையலாம். எனக்கு சிறப்பு வகுப்பு நடத்திய பேராசிரியர் பாடம் எடுக்கும்போது, இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கு என்று கேள்வி ஏதாவது வந்தால் அதனை சாய்சில் விட்டுவிடுங்கள். ஏனென்றால் முஸ்லிம்களின் பங்களிப்பு அதிகம் இல்லை என்றார். இது எனது மனதில் சற்று உறுத்தலாக இருந்தது. ஏனென்றால் செங்கோட்டையில் எனது துணைவியாரின் றாறா (தாத்தா) சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர். (செங்கோட்டை மேலூர் சாகுல் ஹமீதின் புதல்வர் 1907 இல் பிறந்தவர் அப்துல் மஜித். 1927 போராட்டங்களிலும் சட்ட மறுப்பு இயக்கங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்)

எளியேனது ஊரான விசுவநாதபுரத்தில் முகம்மது உசேன் புதல்வராக 1915இல் பிறந்த நாகூரப்பா இராவுத்தர் எனது பெரியப்பா. 1936களில் கள்ளுக்கடை மறியலிலும், அந்நியத் துணி எதிர்ப்புப் போரிலும் பங்கேற்றவர். இருவரும் அரசாங்கத்தால் வழங்கப்படும் பென்சனை நிராகரித்தவர்கள்; வாங்காதவர்கள்.

நமக்கு தெரியவே நமது நன்னா (தாத்தா) நமது பெரியத்தா இரண்டு பேர் நமது ஊரிலேயே இருந்தார்கள். இந்த ஆசிரியர் இப்படிச் சொல்கிறாரே என்று என்னுள் கேள்வி எழுந்தது. அதுவே இதயத்தில் வித்தாக விழுந்தது. சுதந்திரப் போரில் தமிழக முஸ்லிம்கள் பங்களிப்பு பற்றி விரிவாக ஆய்வினை செய்யத் துவங்கினேன். வரலாற்றெழுத்தியலில் ஆர்வம் வந்தது. இத்துறைக்குள் போகவேண்டுமென ஆசைப்பட்டு முடிவெடுத்தேன், அதனால் உடல் நலம், பொருள் வளம் அனைத்தும் குன்றியது. ஆனால் பெருமளவில் செய்திகளை வரலாற்று உண்மைகளைத் திரட்ட முடிந்தது. வரலாற்றுத் துறைக்குள் விரும்பித்தான் சென்றேன். PUC, B.A, M.A, M.Phil, P.hd என அனைத்து வகுப்புகளிலும் வரலாற்றையே எடுத்தேன். வரலாற்றைப் படித்து வருகிறேன், ஆய்ந்து வருகிறேன். என்னால் ஆன பணிகளைச் செய்து வருகிறேன்.

கேள்வி 2: **இந்திய வரலாறு திருத்தி எழுதப்பட வேண்டும் என்கிற வலதுசாரிகள் கூப்பாடு அதிகரித்து வருகிறது. பல**

பத்தாண்டு காலமாக வரலாற்று ஆய்விலுள்ள தாங்கள் இதை சரி காண்கிறீர்களா?

கேள்வியிலே உள்ள **கூப்பாடு** என்ற சொல்லை நான் ஏற்கவில்லை. உரத்த குரல், கோரிக்கை என்று எடுத்துக் கொள்வோம்.

அடியேன் பள்ளிக்கூடத்தில் பயின்றபோது மாமன்னர் ஔரங்கஜேப் குறித்துச் சொல்லித்தரப்பட்ட செய்திகள் பல பொய்யானவை; உண்மைக்கு மாறானவை என்பதை அறிந்தேன். ‘வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்’ எனும் தொடரினை திருநெல்வேலியிலிருந்து வெளிவரும் ஜமாத்துல் உலமா மாத இதழில் கண்ணியத்திற்குரிய மௌலவி அபுல்ஹஸன் ஷாதலி நூரிய்யி பாஜில் பாகவி தேவபந்தி அவர்களின் விருப்பத்திற்கேற்ப எழுதத் தொடங்கினேன். (AURANGAZEB IN THE LIGHT OF HISTORY) அதனை 1999இல் 524 பக்கங்களைக் கொண்ட நூலாக (கிரவுண்சைஸ்) வெளியிட்டேன். இது ஔரங்கஜேப் வாழ்க்கை வரலாற்று நூல் அல்ல. ஔரங்க என்ற சொல்லிற்கு அரசு சிம்மாசனம் என்றும், ஜேப் என்ற சொல்லிற்கு அழகு என்றும் பொருள். இவ்விரு பார்ஸீச் சொற்களுக்கும் அழகிய அரசு சிம்மாசனம் என்று பொருளாகும். வேலூர் மௌலானா அப்துல் பாரி அவர்கள் 8.3.1995இல் அடியேனுக்கு எழுதிய கடிதம் மூலம் இதனை அறிந்தேன்.

ஔரங்கஜேப் என்பதற்குப் பதிலாக ஔரங்கசீப் என்றே பலரும் கூறி வருகிறார்கள். பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் அப்படியே சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு ஔரங்கஜேப்பின் பெயரையே மாற்றி அழைத்தவர்கள் அவரது வரலாற்றை எப்படி எப்படியெல்லாமோ மாற்றியும் திரித்தும் இருக்கிறார்கள், தந்திரங்களும் சூழ்ச்சிகளும் நிறைந்த இப்பூமியில் தெரிந்தவற்றையும், மக்கள் மறந்து போய்விடுகின்றனர். தெரியாமலேயே போகுமாறு பல உண்மைகள் இங்கு சிதைக்கப்பட்டிருக்கின்றன.எனவே எல்லாவற்றையும், எல்லாக் காலத்திலும், பல வடிவங்களில் பல தளங்களில் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஔரங்கஜேப் தந்தை ஐந்தாவது முகலாயச் சக்கரவர்த்தி அபுல் முஸஃப்பர் ஷிஹாபுத்தீன் முஹம்மத் ஷாஜகானை (Shahjahan) சிறையில் தள்ளியவரா? சகோதரர்களைக் கொன்று

விட்டுச் சக்கரவர்த்தியா? ஜிசியா வரியால் இந்துக்களைத் துன்புறுத்தியவரா? இந்துக்களை வேலை நீக்கம் செய்தவரா? அப்ஸல்கானை அனுப்பி சிவாஜியை அழிக்க முயன்றவரா? இராஜபுத்திரர்களின் விரோதியா? சீக்கியர்களின் விரோதியா? இசைக்கலைஞர்களை இம்சித்தாரா? செருப்பிற்கு சிறப்பு செய்திடச் சொன்னவரா? இந்துக்களை இம்சித்தவரா? ஔரங்கஜேப் மத வெறியரா? என்ற கேள்விகளை எழுப்பி அதற்குப் பதில் தருவதே அந்த நூல்.

அந்த நூலின் இறுதியில் உலகப் பேரரசர்களில் உயர்ந்தவர் ஔரங்கஜேப் என்பதனை நிலைநாட்டியுள்ளேன். இந்த நூலைக் கொண்டு சென்று, மதுரை காமராஜர் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையை அணுகி, ஔரங்கஜேப் குறித்த தவறான தகவல்களை நீக்கச் சொல்லி கோரிக்கை வைத்து வெற்றி பெற்றது இஸ்லாமிய அமைப்பு (இலக்கியச்சோலை). மதுரை காமராசர் பல்கலைக்கழ அஞ்சல் வழிக் கல்வி வரலாற்று ஏட்டில் ஔரங்கஜேப் குறித்த தவறான பகுதிகள் நீக்கப்பட அடியேனது படைப்பு ஒரு காரணமாயிற்று அது மட்டுமா?

சேலம் அரசு கலைக்கல்லூரி ஆண்டு மலர் 2003–2004இல் பக்கம் 45, 46 இல் ஆர் விஜ(ஷ)யகுமார் எழுதிய

காதல் காதல் காதல்... காதல் இல்லையேல் சாதல் என்று கட்டுரை வெளிவந்தது. அதில் எடுத்த எடுப்பில்

ஔரங்கசீப்பின் பிள்ளைகள் ஜெபுன்னிசா, முலயம்சுல்தான் ஜீனத்நிஷா, பக்ருன்னிசா ஆகியோர். ஜெபுன்னிசா, அகில்கான் என்கிற இளைஞனைக் காதலிக்கிறார். அவர்களை அழிக்க எண்ணிய ஔரங்கசீப் அகில்கானை கொதிக்கும் நெருப்பு மூட்டி அவனை வேகவைத்தே கொன்று விடுகிறான். எத்தனை கொடூரமான சிந்தை பாருங்கள். தெருவில் திரியும் நாய்க்குக்கூட பக்குவமும் பாசமும் உள்ளது. ஔரங்கசீப்பின் மிருகத்தனமான கொடுங்கோலாட்சியை விமர்சிக்க இதனைக் காட்டிலும் கீழான உவமை எனக்கு வேறுகிடைக்கவில்லை. உங்களுக்குத் தோன்றினால் அதையும் சேர்த்து இத்துடன் படித்துக் கொள்ளுங்கள் என்று விஜயகுமார் குறிப்பிட்டிருந்தார். அடியேன் உடனே 'விடியல் வெள்ளி' என்ற இஸ்லாமிய இதழுக்கு (அதன் தற்போதைய பெயர் புதிய விடியல்) விரிவாக எழுதினேன். அப்போது உண்மையை உலகறிந்தது.

அக்கட்டுரையில், ஔரங்ஜேப்பிற்கு பத்து பிள்ளைகள், ஆனால் கட்டுரையாளர் நான்கு என்கிறார். இதிலே தவறு ஆரம்பம் என்று சுட்டிக்காட்டி 2.11.1663 இல் லாகூரில் ஔரங்கஜேப்பைச் சந்தித்த அகில்கான், மாளிகையின் கண்காணிப்பாளராக ராஜாங்கப் பதவியில் அஞ்சல் துறை தலைவர், இரண்டாவது ஊழிய அதிகாரியாகப் பணியாற்றி டெல்லியில் சுபேதராக நியமிக்கப்பட்டு 1696இல் இயற்கையாகவே மறைந்தார் என்ற வரலாற்றுக் குறிப்புகளை தெள்ளத் தெளிவாகச் சொன்னேன்.

ஆனந்த விகடன் வார இதழ் குழுமத்தின் சார்பில் நடந்து வரும் விகடன் பிரசுரம் அடியனேது வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப் நூலினை இந்த கட்டுரையையும் சேர்த்து ஆகஸ்ட் 2013இல் ரூபாய் 160 விலையில் 424 பக்கங்களில் (டிம்மி சைஸ்) வெளியிட்டது. அந்த நூல் தற்போதும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

17.4.2005 ஆனந்தவிகடன் இதழில் பிரசித்தி பெற்ற எழுத்தாளர் சுஜாதா 'கற்றதும் பெற்றதும்' பகுதியில் யாராவது கோவிந்தா கூட்டத்தின் பாடல்களை உன்னிப்பாகப் பாடியெடுத்தால் கிபி 1323இல் முகம்மதுயர் படையெடுப்பின் போது 13000 வைஷ்ணவர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி பற்றி ஏதாவது செய்தி கிடைக்கலாம். அல்லது வெள்ளைக் கோபுரத்தில் ஏறி இரண்டு ஜீயர்களும் அழகிய மணவாளதாசர் என்பவரும் தற்கொலை செய்து கொண்ட செய்திகூட ஒளிந்திருக்கலாம் என்று எழுதினார். இது தவறான வரலாற்றுத் தகவல் என்பதால், முஸ்லிம்கள் படையெடுப்பு, 13000 வைஷ்ணவர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சி, இது மக்களின் மனங்களில் ராக்கெட் வேகத்தில் சென்று அடையக்கூடிய செய்தி ஆயிற்றே. இந்த விஷயத்தில் வரலாற்று உண்மைகளை உலகுக்கு தெரிவிப்பது தார்மீகக் கடமை என்பதை அப்போது உணர்ந்தேன்.

2005 ஆகஸ்ட் முதல் 2006 ஜூலை வரை 'சுஜாதாவிற்குச் சவால்' எனும் தலைப்பில் பதிலை விடியல் வெள்ளி இதழ் வாயிலாக எழுதினேன்.

புதுக்கோட்டை அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த தோழர் ஒருவர் அப்போது என்னிடம் வந்தார். சுஜாதாவே தவறாக எழுதிவிட்டதாக தன்னிடம் தெரிவித்தார். இனிமேல்

முஸ்லிம்கள் குறித்து குறையாக எழுதமாட்டேன் என்று தகவலையும் சொன்னார். இன்னும் சொன்னார், அதனை விரிவாக்கிடவில்லை. மாலிக்காபூர் ஆராய்ச்சி நூல் 112 பக்கங்களில் எனது 72 வது நூலாக செப்டம்பர் 2008இல் வெளியிட்டேன்.

உங்களது சமநிலைச் சமுதாயம் ஏப்ரல் 2008 பக்கம் 13இல் என் இனிய நண்பர் சுஜாதா இங்கும் அங்கும், ஏவிஎம் ஜாபர்தீன் கட்டுரையைப் பாருங்களேன், நான் சொல்வது தெளிவாகும். விகடன் பிரசுரம் எண் 712 ஆக டிசம்பர் 2012இல் ஒரு மாவீரனின் மறுபக்கம் மாலிக்காபூர் நூல் 119 பக்கங்களில் வெளிவந்துள்ளது. அது ஜுலை 2013இலும் தொடர்ந்து மறு பதிப்பு கண்டு தற்போதும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

1994இல் மதன் எழுதிய வந்தார்கள் வென்றார்கள் என்ற நூல் வெளிவந்தது. பல பதிப்புகளைக் கண்டு இலட்சக்கணக்கில் விற்பனையாகும் நூல் அது.இதில் 'வந்தார்கள் வென்றார்கள்' என்ற தலைப்பே தவறானது 'வரச்சொன்னார்கள், வந்தார்கள், வென்றார்கள்' என்று அப்போது மதுரையிலிருந்து வெளிவரும் குர்ஆனின் குரலில் நான்கு கட்டுரைகள் எழுதினேன்.

முஸ்லிம்கள் மட்டும் படிக்கின்ற சில ஆயிரம் பிரதிகள் விற்பனையாகும் குர்ஆனின் குரலில் அடியேன் எழுதிய கருத்துக்கள் வெகுஜன பிரபலமான அளவில் சென்றடையவில்லை. அனைத்துத் தரப்பிலும் கொண்டு செல்லும் அளவிற்கு அடியேனிடம் ஊடகங்கள் இல்லை. வசதிவாய்ப்புக்களும் இல்லை.

2003 ஏப்ரல் – ஜுன் சொல் புதிது காலண்டிதழில் வசதி வாய்ப்புக்களும் இல்லை. (அப்போது ஆசிரியர் ஸதக்கத்துல்லாஹ் ஹஸனீ) கோமாளியாக்கப்பட்ட மன்னன் என்று கட்டுரையை முகம்மது பின் துக்ளக் குறித்து எழுதினேன் பக்கம் 18–22 தொடர்ந்து அதனை நிறைவு செய்யவில்லை இப்படி வரலாற்று ஆய்வில் சரிக்காண்கிற முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறேன்.

கேள்வி 3: **வரலாற்று குறிப்புகளில் உள்ள இடைவெளியை ஊகிப்பதன் மூலம் எழுதப்படுவது புதினமாக, நாவலாக**

இருக்கலாம். அதையே உண்மையென்று நிறுவ முயற்சிக்கும் செயல்பாடுகளைப் பற்றி.

நிச்சயமாக அதனை ஏற்க முடியாது. வரலாறு வேறு, நாவல், புதினம் வேறு. படைப்பாளியின் கற்பனைகளால் நிரப்ப முயல்வதை ஏற்க இயலாது. கல்கியின் பொன்னியின் செல்வன் பிரபலமான தற்போதும் பல்லாயிரம் பிரதிகள் விற்பனையாகும் நாவல்தான். இதில் சில இடைவெளிகள் உண்டு. கற்பனைகள் உண்டு.

அதுபோல மே 2002இலிருந்து தொடர்ந்து வெளியான பாலகுமாரனின் உடையார், மாமன்னன் இராஜராஜ சோழரின் வரலாறு பாகம் 1 448 பக்கங்கள், பாகம் 2 ஜூலை 2002 464 பக்கங்கள், பாகம் 3 டிசம்பர் 2004 504 பக்கங்கள், பாகம் 4 ஏப்ரல் 2005 416 பக்கங்கள், பாகம் 5 டிசம்பர் 2005 367 பக்கங்கள், பாகம் 6 ஆகஸ்ட் 2006 536 பக்கங்களில் நாவலாக வெளிவந்துள்ளது.

அதன் இரண்டாவது பாகத்தில் முன்னுரையில் பக்கம் 6இல் "ஆதித்த கரிகாலனை யார் கொன்றார்கள்" என்று சரித்திர பேராசிரியர்களால் உறுதிப்படுத்த முடியவில்லை. அதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை.

சான்று இல்லாமல் எந்த முடிவுக்கும் வருவதில்லை. அந்த இடத்தை எடுத்துக் கொண்டு யாரால் எப்படி இந்தக் கொலை நிகழ்ந்திருக்கக்கூடும் என்று கற்பனை செய்வது.

எழுத்தாளனின் உரிமை வெறுமனே சரித்திர நிகழ்வுகளை கல்வெட்டில் கிடைத்தது மட்டுமே சொன்னால் சுவாரசியமாக இராது என்று ஒரு நிலைப்பாடு எடுத்துக் கொண்டு அந்த அரசியல் சூழ்நிலையை திரும்பத் திரும்ப யோசித்து விவாதித்து இந்த உடையார் நாவல் படைக்கப்பட்டிருக்கிறது என்பார் பாலகுமாரன். அது அவரது உரிமை.

அமரர் கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் என்ற வரலாற்றுக் கற்பனை நாவலில் சோழ இளவரசன் ஆதித்த கரிகாலன் கொலைச் சம்பவம், துப்பறியும் நாவல்களுக்குச் சவால் விடும் வகையில் கூறப்பட்டு இருக்கும் என்பர். அமுதன் ஆயிரம் ஆண்டு அதிசயம் நூலில் பக்கம் 16இல் உண்மையிலேயே ஆதித்த கரிகாலன் மர்ம மரணத்தின் விடை

அவரது உடலோடு மண்ணுக்குள் மறைந்து போய்விட்டது. அவர் எதற்காக யாரால் கொலை செய்யப்பட்டார் என்பது மர்மமாகவே இருப்பதாகவும் கருதப்பட்டது.

ஆதித்த கரிகாலனை சுந்தர சோழருக்குப் பின் (கிபி 957) ஆட்சிக்கு வந்த உத்தம சோழர் கொன்றார் என்பாரும் உண்டு. ஆதித்தகரிகாலன் கொலையில் மாமன்னர் இராஜராஜனுக்கும் அவருடைய சகோதரி குந்தவைக்கும் பங்கு உண்டு என்று சொன்னவர்களும் உண்டு. ஆனால் இந்த மர்மக் கொலைக்கான விடை தற்போதைய கடலூர் மாவட்டம் **காட்டுமன்னார் குடியின் ஒரு பகுதியாக விளங்கும் உடையார்குடியில் உள்ள சிவன் கோவில் கருவறையில்** காணப்படும் கல்வெட்டில் இருக்கிறது.

ஆதித்த கரிகாலனை கொன்றவர்கள் மற்றும் அவரது உறவினர்களின் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு அவை விற்கப்பட்ட செய்தியை அந்தக் கல்வெட்டு கூறுகிறது. அந்தக் கல்வெட்டு செய்தியைப் பார்க்கும்போது ஆதித்த கரிகாலனை **சோமன்** அவன் தம்பிகள் **ரவிதாசன், பரமேஸ்வரன் (சேர அந்தணர் பரம்பரை)** ஆகிய மூவர் மட்டுமே கொன்ற துரோகிகள் என்பது வரலாற்று ஆய்வாளர்கள் கருத்தாக இப்போது உள்ளது.

ஆதித்த கரிகாலன் கொலையைத் தொடர்ந்து கொலை செய்தவர்களான 'ரவிதாஸனும், பரமேஸ்வரனும்' பரத கண்டத்தை விட்டுத் தப்பி ஈழம் போனார்கள். ஈழத்திலும் அவர்களைத் தேடும் பணி நீடித்ததால் ஈழத்தின் கிழக்குக் கடற்கரையோரம் வந்து அங்கிருந்து பெரிய நாவாய்களில் சீனத்துப்பட்டு விற்கு வந்த வியாபாரிகளோடு பயணப்பட்டார்கள்.

இவையெல்லாம் பாட்டாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒப்பாரியாக இன்றும் பாண்டிய தேசத்தில் பாடப்பெறுகின்றன என்பார் பாலகுமாரன் (உடையார் பாகம் 3, பக்கம் 156)

வரலாற்று ஆய்வு என்பது முடிந்த முடிவல்ல; அது தொடர்ந்து கொண்டே இருக்கும். புதினத்திலும் நாவலிலும் கற்பனை கலந்து எழுதப்பட்ட செய்திகளையே உண்மையென்று நிறுவ முயற்சிக்கும் செயல்பாடுகள் வரலாற்றுக்கு ஏற்புடையதல்ல. மூலாதாரச் சான்றுகளே வரலாற்றுக்கு ஏற்புடையதாகும்.

4வது கேள்வி: **நாட்டுப்புறப் பாடல்களை வரலாறாகக் கொள்ள முடியுமா?**

'மனிதன் தோன்றி சமுதாயமாக இனக்குழுச் சமுதாயத்தில் இருக்கும்போது மற்றவர்களோடு உறவாடுவதற்கு, எண்ணிய எண்ணத்தைப் புலப்படுத்துவதற்கு கருத்துப் புலப்படுவதற்கு ஓர் ஊடகம் தேவையானது. சைகையை மொழியாக்கி மனதில் எண்ணிய கருத்தைப் புலப்படுத்தினான், சொன்னான், அதோடு ஒலித்துக் காட்டினான். அதன்பின் ஆடல் பாடல் வழி குதித்துச் சொன்னான். பாட்டையும் சேர்த்து ஆட்ட பாட்ட மாக்கிப்புலப்படுத்தினான். இங்கே பாட்டு என்பது மகிழ்ச்சி. ஆரவார ஒலி. அதன்பின் பேச்சைக் கற்றுக் கொண்டு பேச்சுவழி சமுதாயத்தில் நுழைந்தான். இதற்கு முன் குறியீட்டின் வழிவரைதல் வழிக்கருத்தைப் புலப்படுத்தினான். பேச்சைக் கற்றபின் எழுதிப் பார்த்தான்.

பேச்சுவழி சமுதாயத்தில் இருக்கும்போது பாடிப்பார்த்தான். அதன்பின் ஆட்டத்தில் சேர்த்துப் பாடி ஆடினான். இதன்பின் தான் எழுதிப் பார்க்கும் நிலை வந்தது. இவ்வாறு தமிழ்ச் சமுதாயம் இனக்குழுவில் இருக்கும்போது பாடினர், அப்போது அவர்கள் பாடிய பாட்டு நாட்டுபுறப் பாட்டு. நாட்டார் என்று இன்னொரு வகையினரும் சொல்லிக் கொள்கின்றனர். இரண்டும் ஒன்றே. மக்களில் விவரம் தெரிந்தவர், தெரியாதவர், படித்தவர், படிக்காதவர், பழகித் தேர்ந்தவர், பழகாதவர், மனம் போன போக்கில் போகிறவர், கட்டுப்படுத்திச் செல்பவர், எடுத்த எடுப்பில் சொல்பவர், நிதானமாகச் சொல்பவர் என்று சொல்லுவது உண்டு. இவர்களே பாட்டுக்கள் பாடி நாட்டுப்புறமும் ஆக்கினர், செம்மையான செவ்வியலும் ஆக்கினர். சான்று சங்க இலக்கியமான குறுந்தொகைக்கு திருக்கண்ணபுரத்தலத்தான் திருமாளிகை சௌரிப் பெருமாள ரங்கன் திணை, துறை குறிப்பிட்டு, வாணியம்பாடி மதரஸே இஸ்லாமியப் பள்ளியில் தமிழாசிரியராய் பணிபுரிந்தபோது 1915இல் வெளியிட்டார்.

பழந்தமிழ் இலக்கியங்கள் 1193 பாடல்கள் பாணர் பாட்டோ புலவர் பாட்டோ இல்லை. மக்கள் பாடிய நாட்டுப்புறப் பாட்டுக்கள். இவை எழுத்துப் பண்பாட்டிற்கு முன் ஆயிரம் ஆண்டுகளாகப் பாடப்பட்டு வந்தவை என்று முனைவர் துளசி இராமசாமி பழந்தமிழ் இலக்கியங்கள் நாட்டுப்புறப்

பாடல்களே என்று 2012 ஆகஸ்டில் 888 பக்கங்களைக் கொண்ட டிம்மி சைஸ் நூலையே வெளியிட்டுள்ளார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் இராமநாதபுரம் பேட்டிக்கு புறப்பட்டுச் சென்ற நிகழ்ச்சியைத் தொடக்கம் முதல் இறுதி வரை விரிவாகவும் தெளிவாகவும் மிகைப்படுத்தாமலும் கதைப்பாடல்கள் பாடுகின்றன.

கர்னல் வெல்ஸ் என்பவர் பாஞ்சாலங்குறிச்சியில் ஊமைத்துரை நடத்திய இரண்டாவது போரில் நேரிடையாகப் பங்கு பெற்றவர். அவர் தன்னுடைய போர் நினைவுகளை இராணுவ நினைவுக்குறிப்புகள் என்று இரு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். Colonel James Welsh, MDCCCXXX 1830 (Of the Madras Establisment) Military Reminiscences; Extracted From A Journal of Nearly Forty Year's Active Service in the East Indies Vol I, இலண்டனில் Smith, Elder and Co; Corn Hill இல் அச்சிடப்பட்டது.

முதல் வால்யூம் 352 பக்கங்களுக்கும் அதிகமானது. இரண்டாவது தொகுதி அதே அச்சகத்தில் அதே ஆண்டில் அச்சிடப்பட்டது 347 பக்கங்களைக் கொண்டது. முதல் தொகுதியில் பக்கம் 68இல் பாஞ்சாலங்குறிச்சியில் நடந்த இரண்டாவது போரைப் பற்றி, அப்போரில் கலந்து கொண்ட கர்னல்வெல்ஷ் (Col.Welsh) எழுதியதன் ஒரு பகுதி.

The 1st of April was ushered in with painful re-collection that many of our late gay and cheerful companians were lying at the foot of breach unburied and a flag of truce was consequently sent to the fort, to entreat permission to remove and intern our dead. This was kindly and unconditionally accorded and we then collected the disfigured and gory bodies and buried them in the evening, with military honours. The enemy, setting us a bright example of humanity, made not The smallest attempt to disturb us and we enjoyed a good night's rest, that of the preceding having been anything but refreshing.

"ஏப்ரல் முதல் நாளன்று கோட்டைப் பிளவு வாயிலில் வீழ்ந்து இன்னும் புதைக்கப்படாமல் நமது வீரர்களைத் தாங்கொணா மனத்துயரத்தோடு கண்டோம். ஒரு சமாதானக் கொடியைக் கோட்டைக்குள் அனுப்பினோம். இறந்த நமது

வீரர்களைப் புதைப்பதற்கு அனுமதி வேண்டி இக்கொடியை அனுப்பினோம். எவ்வித நிபந்தனையும் இன்றி அனுமதி அன்போடு அளிக்கப்பட்டது. பல்வேறு துண்டங்களாகக் கிடந்த நமது வீரர்களின் உடல்களை எடுத்து வந்து போர் மரியாதைகளுடன் புதைத்தோம். நமது எதிரி பெரும் மனிதத் தன்மையுடனும் நமக்கெல்லாம் வழிகாட்டும் வகையிலும் நடந்து கொண்டதை எண்ணி வியக்கிறோம். இம்மியளவு கூட நமக்கு எவ்விதத் தொந்தரவும் அளிக்காது வழிகாட்டினர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

"தப்பாமல் சண்டை முனையில் சென்னபேரைத்
தானடக்கம் செய்ய வேணுமென்றார்
கும்பினியார்களும் கம்பளத் தார்களுங்
கூவென்று வெள்ளைகள் வீசிக்கொண்டு
நம்புதலாகவே பேசிக்கொண்டார் ஒரு
நாழிகைக்கு மனராசி யென்றார்
அவரவர் பிணங்களை அவரவர் தானே
அன்புடன் வாரிச் சுமந்தனராம்" என்று பாடல் குறிப்பிடுகிறது. இவை போன்ற எண்ணற்ற சான்றுகளை கூறமுடியும். எனது பாசத்திற்குரிய பேராசிரியர் வே.மாணிக்கம் கட்டபொம்மன் கும்மிப் பாடல்களை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். தமது நூல்களில் இந்தக் கருத்தினை நிலைநாட்டியுள்ளார்.

நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப் (Uncomparable Great Hero Marutha Nayakam Khan Sahib (Yussuf Khan) *எனும் ஆய்வுநூலை டிசம்பர் 1997 இல் 214 பக்கங்களில் அடியேன்* வெளியிட்டேன். அதில் சென்னை *ராஜதானியில் சிவில் சர்வீஸில் பணியாற்றி பின்னர் லண்டன் கேம்பிரிட்ஜ் மன்னர் கல்லூரியில் பணியாற்றிய ஜே.எச்.நெல்சன் எழுதி, (1868) ஆங்கிலேயர்களால் கான்சாகிப் தூக்கிலிடப்பட்ட நூறு ஆண்டுகளுக்குப் பின் வெளிவந்த நூலில், கான்சாகிப் ராமநாதபுரம் மாவட்டம் பனையூரில் வேளாளர் குலத்தில் பிறந்தவர் என்ற தகவலை திரு. பொன்னுச்சாமித் தேவர் தன்னிடம் தெரிவித்ததாகக் குறிப்பிடுகிறார்.*

According to one of Ponnusami Tevan's Memories which as observed before are generally very fairly accurate, Mohammed Yusufkhan, better known in Madura by the name of Gaunsah Kumman than (Khansheb, Commandant) was a Hindu of the vellala caste in Paniyur in the Ramand country. *இங்கு நெல்சன் கான்சாகிப் வேளாளர் குலத்தில் பிறந்தவராக இருக்கலாம் என்று மட்டும் சொல்லியிருப்பதை கவனத்தில் கொள்க.*

கான்சாகிப் வெள்ளை ஏகாதிபத்தியத்தினரால் தூக்கிலே தொங்கவிடப்பட்டு ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்குப் பின் மதுரையில் அமைந்திருந்த ராமநாதபுர மாவட்ட நீதிமன்றத்தில் சிரஸ்தாரரராகப் பணியாற்றிய திரு.ரங்கசாமி நாயுடு காரு என்பவர் சொல்லிய செவிவழிச் செய்திகளின் அடிப்படையில் செய்தியை வைத்து எழுதிய நூலில் எஸ்.ஸி. ஹில் குறிப்பிடும் தகவல் இதோ;

According to tradition YusufKhan was born a Hindu, of the vellala caste, of Paniyur, in the district, of Ramnad, his name being Maruthanayagam Pillai.

1868இல் வெளிவந்த நெல்சனின் நூலில் வேளாளர் குடும்பத்தில் பிறந்தவர் என்றிருந்தது. 1914இல் வெளிவந்த எஸ்.ஸி.ஹில்லின் நூலில் வேளாளர் குடும்பத்தில் பிறந்த மருதநாயகம் பிள்ளை என்று மாறியிருப்பதையும் கவனத்தில் கொள்க.

கான்சாகிப் ஆங்கிலேயரை எதிர்த்து தூக்கிலே தொங்கிய 150 ஆண்டுகளுக்கு பின்னால் சிரஸ்தார் ரெங்கசாமி நாயுடு காரு சொன்ன ஒரே ஒரு செய்தியைத் தவிர கான்சாகிப்பின் முந்தைய பெயர் மருதநாயகம் பிள்ளை என்று சொல்வதற்கு வரலாற்றில் வேறு எங்காவது சான்றுகள் உண்டா? இல்லை! இல்லவே இல்லை.

சம காலத்திய நூல்கள், அரசு ஆவணக் காப்பகத்தில் உள்ள பதிவேடுகள் அத்தனையிலும் தேடித்தேடிப் பார்த்தாலும் மருதநாயகம் என்று பெயர் காணக்கிடைக்காது.

மதுரையை ஒட்டியுள்ள கிராமம் பனையூர், இராமநாதபுரம். திருநெல்வேலி மாவட்டங்களில் பனையூர்கள் இருக்கின்றன. ஆனால் கான்சாஹிப் பிறந்தது மதுரை பனையூரிலேயாகும்.

அங்கு வாழ்ந்து வந்த மார்க்க அறிவு பெற்ற ஏழை முஸ்லிம் ஆலீம். பிறரிடம் ஊழியம் செய்யாமல் சுதந்திரமாகத் தையல் தொழில் செய்து குடும்பத்தைக் காத்து வந்தார். அவருக்குக் கம்பீரமான அழகான ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. யூசுப்கான் என்று தந்தை அதற்குப் பெயரிட்டார். அந்த குழந்தையே பிற்காலத்தில் மாபெரும் வீரனாக வளர்ந்து கான்சாஹிப் என்று பிரசித்து பெற்றது; இது மஹதியின் கூற்று.

வேளாளர் குலத்தில் பிறந்த ஒருவர் முஸ்லிமாகியிருந்தால் அதுவும் பிரசித்தி பெற்ற மாவீரர் ஒருவர் மதம் மாறியிருந்தால் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க அந்த முக்கிய சம்பவத்தைப் பற்றி சான்றுகள் உறுதியாகக் கிடைக்கக்கூடும். ஆனால் கான்சாகிப்போ, ஆற்காட்டு நவாபோ, ஆங்கிலேயரோ இந்த விஷயத்தைப் பற்றி குறிப்பிட்டதே இல்லை. அத்துடன் சமகாலத்து ஆவணங்களிலும் சான்றுகள் இல்லை.

வணிகக்கொடி பிடித்து வஞ்சக வலைவிரித்து வளமார்ந்த திருநாட்டை வளைத்துக் கொண்ட வெள்ளையர்கள் மாவீரன் கான்சாகிபைத் தூக்கிலிட்டு, நூறு ஆண்டுகளுக்குப் பின் திரு.பொன்னுச்சாமித் தேவரும், நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின் திரு.ரெங்கசாமி நாயுரு காருவும் சொல்லிய செவிவழிச் செய்திகள் தவிர வேறு சான்றுகளை வரலாற்று ஆய்வாளர்கள் காட்டிட முடியுமா?

உண்மை வரலாறு என்ன? சரித்திரத்தின் சத்தியப் பக்கங்களை சாய்த்திடப் பார்ப்பது யார்? கான்சாகிப் பிறவியிலேயே இந்துவா? அல்லது முஸ்லிமா?

கான்சாயபு சண்டை

ராபர்ட் ஓர்ம் (Robert Orme) அவர்களால் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட அரசு ஆவணங்கள். கைப்பிரதிகளின் தொகுப்பு, பிரஞ்சு ஆவணங்கள் ஆகியவற்றின் உதவிகொண்டு கான்சாகிப்பின் வரலாற்றை எழுதியதாகக் குறிப்பிடும் எஸ்.ஸி.ஹில் தனது நூலின் முன்னுரையில் குறிப்பிடும் இன்னொரு சரித்திரச் சான்று கான்சாயபு சண்டை என்ற நூல். கோகுலாபுரம் அருணாசல முதலியார் அவர்களால் பார்வையிடப்பட்டு, கொண்ணூர் மாணிக்க முதலியார் அவர்களால் தமது மநோன்மணி விலாசவச்சுக்

கூடத்திற்தாரண வருடம் (கி.பி.1885) பதிப்பிக்கப்பட்ட நூல் கான்சாயபு சண்டை.

குயப்பேட்டை வீ.இராஜு முதலியாரவர்களால் பார்வையிடப்பட்டு மதுரை புதுமண்டபம் புத்தகஷாப் பி.நா.சி. கடைகாரியம் மு.கிருஷ்ணப்பிள்ளை அவர்களால் பி.நா.சிதம்பர முதலியார் பிரதர்ஸ் அவர்களது சென்னை வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தில் 1926இல் ஆறு அணா விலையில் திரும்பவும் பதிப்பிக்கப்பட்ட நூல் கான்சாயபு சண்டை.

1970இல் நா.வானமாமலை அவர்கள் தனக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்பு வெளியான பழைய அச்சுப் பிரதியின் அடிப்படையில் 'கான் சாகிபு சண்டை' என்ற நூலினை பதிப்பித்தார். மதுரைப் பல்கலைக்கழகம் (தற்போது மதுரை காமராாசர் பல்கலைக்கழகம்) 1972 மார்ச்சில் அதை வெளியிட்டது.அவரது கணக்கின்படி அந்த பழையபிரதி 1910ஆம் ஆண்டுவாக்கில் அச்சிடப்பட்டிருக்கலாம். அதன் பதிப்பாசிரியரது பெயரை அவரும் குறிப்பிடவில்லை. முன்னர் குறிப்பிட்ட அருணாலச முதலியார், வீ.இராஜு முதலியார் பதிப்பித்த 'கான் சாயபு சண்டை' நூலின் பிரதிகள் தவிர வேறு ஒரு பிரதியும் என்னிடம் இருக்கிறது. இதன் முகப்புப் பக்கங்கள் இல்லாததால் அது யார் பதிப்பித்தது என்று என்னால் அறிய முடியவில்லை. நா.வானமாமலை குறிப்பிடும் நூலாகக் கூட அது இருக்கலாம்.

ஆலிம் குலம் காக்க வரு தீரன்

'மகுட முடிடால் விருதிலங்க
மதயானை வளர்த்தெடுக்க வரிவேங்கைக் குட்டி
விகடமிடுவோர்கள் குல காலன்
விசை யாலீம் குலம் விளங்க வருதீரன்'

'கான்சாகிபு சண்டை' என்று வெளிவந்துள்ள அத்தனை பதிப்புகளிலும் இந்த பாடல் வரிகள் காணப்படுகின்றது.

இதில் சொல்லப்படுவது என்ன?
ஆலீம் குலம் விளங்க வருத தீரன்
என்பதின் பொருள் என்ன?

மருதநாயமாகப் பிறந்திருந்தால் அதைப் பற்றி அந்தப் பாடல் வரிகளின் முன்னே குறிப்படாதது ஏன்? ஆலிம் குலம் காக்க வந்த தீரன் என்று மட்டுமே கூறி கான்சாகிபைப் பற்றி நாட்டுப்புறப் பாடல்கள் அவரை முஸ்லிமாக மட்டும் பறை சாற்றுவது எதனால்?

இந்த ஒரு வரியை வைத்துதானா இந்த விவாதத்தைத் துவக்குகிறாய்? வினாவை எழுப்பியிருக்கிறாய்? என்றால் இல்லை, சமகாலசரித்திர ஆதாரத்தையும் இதோ உங்கள் முன் வைக்கிறேன்.

நூற்றுக்கணக்கான நூல்களையும், குறிப்புகளையும் சான்றாகக் கொண்டு எஸ்.ஸி.ஹில் எழுதிய நூலில் பின இணைப்பாக ஐந்து விஷயங்களைத் தந்திருக்கிறார். அதில் ஐந்தாவது இணைப்பாகச் சொல்லியிருக்கிற விஷயம் (பக் 268) இதோ!

இந்த நாட்டிலே பூத்த சுதந்திர மலரை இரத்தத் தடாகத்தில் ஆழ்த்திய கொடுமைக்குப் பின், அதாவது கான்சாகிபை தூக்கிலே வீரமரணத்தைத் தழுவிடச் செய்ததற்குப் பின், ஒரு வாரத்தில் கிழக்கிந்திய கம்பெனியில் பணியாற்றிய மதிக்கத்தக்க ஒருவர் ஸ்காட்லாந்திலிருக்கும் தனது நண்பருக்கு பாளையங்கோட்டையிலிருந்து 22.10.1764இல் எழுதியிருக்கும் கடிதத்தில் கான்சாகிப் தூக்கிலிடப்பட்டதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அதில் கான்சாகிப் பிறவியிலேயே முஸ்லிம் என்று ஆணித்தரமாகத் தெரிவித்திருக்கிறார்.

I at the same time made you acquainted with our army's having taken the field under the command of Colonel Monson, in order - to reduce the Rebel, commonly known as Khan Sahib. **Khan (Sahib) is by birth a Moor.** and is descended from the ancient seed of that nation.

இந்தக் குறிப்பை S.C.ஹில் கி.பி.1765இல் வெளியான ஸ்காட்ஸ்மாக்கசைன் (The Scots Magazine) பக்கம் 264 இல் இருந்து எடுத்துத் தந்துள்ளார்.

Moor என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அகராதிகள் தரும் விளக்கம் என்ன?

Moor - one of a Mohammedan People.

மூர் – முகமதிய மக்களில் ஒருவர்.

கான்சாகிப் பற்றிய இந்த செய்தி, செவிவழிச் செய்தி அல்ல; அவர் தூக்கிலிடப்பட்ட ஒரு வாரத்திற்குள் எழுதிய கடிதத்திலிருந்து அதிலிருந்து ஓராண்டிற்குள் பிரசுரமான நூலில் காணப்படுகிற சமகால சரித்திரச் சான்று.

'கான்சாஹிப்பின் பாட்டனார் அல்லது முப்பாட்டனார் மருதநாயகம் பிள்ளையாயிருந்திருக்கலாம். முஸ்லிம்கள் அனைவரும் மதம் மாறியவர்களின் வழித் தோன்றல்கள் தாமே' என்ற மஹதியின் வரிகளை இங்கே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மக்களால் போற்றப்படக்கூடிய தலைவனாக விளங்கிய காரணத்தால், கான்சாகிபு மதுரை மக்களால் 'மதுரை நாயகம்' என்று அன்புடன் விளிக்கப்பட்டார். துர்க்காதாஸ் எஸ்.கே.ஸ்வாமி தனது நூலில் மதுரை நாயகமாகவே அவர் திகழ்ந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். என அதுவே காலப் போக்கில், வட்டாரப் போக்கில் மதுரை – மருதை, மதுரை நாயகம் – மருதநாயகம் உருமாறி மருதநாயகமாக மாறியிருக்கக்கூடும். பேராசிரியர் ஹ.மு.நத்தர்சா இதே கருத்தினை வலியுறுத்துகிறார்.

யூசுப்கான் ஒரு பிறவி முஸ்லிம்

யூசுப்கான் ஒரு பிறவி முஸ்லிம். மதுரை ஆளுநராக இருந்ததால் மருதநாயகம் (மதுரை நாயகம்) என அழைக்கப்பட்டார். இவரது வாழ்க்கைக் காவியத்தை நாடெங்கிலும் நாடகமாக கருணாகரன் மேடைகளில் நடித்தார்.

கான்சாகிப் பிறவியிலேயே முகம்மது யூசுப்கானா?

காலப்போக்கில் சொல்லப்படுகிற மருதநாயகமா?

நடுநிலையாளர்களே இதனை உங்களின் இதயத் தராசில் சீர்தூக்கிப் பார்த்திடக் கோருகிறேன்.

நாட்டுப்புறப்பாடல்கள் தெளிவான வரலாற்றையும் சொல்கின்றன. (சில சமயங்களில் மட்டுமே, இடைச்செருகலும், மிகைப்படுத்தலும் இருக்கும்)

எனவே வரலாற்று ஆய்வு என்பது முடிந்த முடிவல்ல, இது தொடர்ந்து கொண்டே இருக்கும்.

கேள்வி 5: **சமீபத்தில் வந்த உள்ளூர் வரலாறுகளில் கோவை மாநகரைப்பற்றிய அமீர் அல்தாப்பின் பெட்டகம், யாழன்ஆதி எழுதிய ஆம்பூர் குறிப்பிடத்தக்கவை. உள்ளூர் வரலாறுகள் எழுதும் முனைப்பில் தான் பிறந்து வளர்ந்த ஊர்களைப் பற்றி மிகைப்படுத்தல்களும், தனிநபர் முன்னிருத்தல்களும் வந்துள்ளன என்கிற குறைகளை பொருட்படுத்தாமல் பார்த்தால் சரியான ஆதாரங்களை எவ்வாறு தேடுவது என்பதற்கு ஏதும் வழிமுறைகளைக் கூறவும்?**

கோவை முஸ்லிம்களின் 300 ஆண்டுகால வரலாற்றுப் பொக்கிஷம் எனும் நூலை எம்.அமீர் அல்தாப் அவர்களை ஆசிரியராகக் கொண்டு அரபிக் கல்லூரி போத்தனூர், கோயம்புத்தூர். கி.பி.2014 இல் பெரிய சைஸில் டபுள் டிம்மி 888 பக்கங்களில் வெளியிட்டுள்ளது. முன்னுரையோடு இன்னபிறவும் சேர்ந்து 976 பக்கங்கள். ரூ.950 விலை. இந்த நூலில் அகண்டபாரதத்தில் ஆதம் (அலை) முதல் இனிய இஸ்லாமும் 8வது பக்கம் முதல் 19வது பக்கம் வரையிலும் தமிழகத்தில் இஸ்லாமும், முஸ்லிம்களும் 20வது பக்கம் முதல் 27 வரையிலும், 28வது பக்கம் முதல் ஸலாமபாத் எனும் கோவைக்கு முஸ்லிம்களின் வருகை கிபி1782 – 2013 (ஹிஜ்ரி 1196–1434) 34வது பக்கம் வரை சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் மஸ்ஜித் மற்றும் ஜமாஅத்துக்கள் வரலாறு விரிவாக சொல்லப்பட்டுள்ளது. 352வது பக்கம் முதல் 309வது பக்கம் வரை. இஸ்லாமிய இயக்கங்கள், அமைப்புகள் அறக்கட்டளைகள் 310 பக்கம் முதல் 433 பக்கம் வரையிலும், கல்வி நிலையங்கள் 423 பக்கம் முதல் 517 பக்கம் வரையிலும், வாணிபம் பற்றி 518 முதல் 553 வரையிலும், எழுத்தாளர்கள் பற்றி 554 முதல் 651 வரையிலும் சிகரம் தொட்ட சான்றோர்கள் 652 பக்கம் முதல் 773 வரையிலும், முக்கிய நிகழ்வுகள் 774 முதல் 888 வரையிலும் அந்த நூல் அமைந்திருக்கிறது.

யாழன் ஆதி எழுதிய ஆம்பூர் – ஓர் அறிமுகம் என்பது ஆழி பதிப்பகத்தால் எனது ஊர் நூல் வரிசையில் 62 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

ஆற்க்காடு, ஆர்.விஜயன் அவர்களால் ஆக்கமும் தொகுப்புமாக 64 பக்கங்களில் வந்துள்ளது. (இவர்கள் வேலூர், திருவண்ணாமலை, குடியாத்தம், ஏலகிரி, ஆரணி,

வந்தவாசி ஊர்களுக்கும் (64 பக்கங்கள்) நூல்களை வெளியிட்டுள்ளார்கள்.)

குமரி மாவட்ட இசுலாமியர் நம்பிக்கைகளும் தர்க்காக்களும் முனைவர் பீரிடாமேபல் ராணியால் எழுதப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 2010இல் வெளியிட்டது.

பெட்டகம் குமரி மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றுப் பொக்கிஷம் பாகம் 1 எனும் டபுள் டிம்மி சைஸ் நூல், ரஹ்மானியா சங்கம் கி.பி. 2001இல் 356 பக்கங்களில் வெளியிட்டது.

முனைவர் அ.அய்யூப் எழுதிய மயிலாடுதுறை வரலாறு சூன் 2011இல் 304 பக்கங்களில் வந்தது. எனது இனிய நண்பர் புலவர் செ.இராசுவும் இனிய சகோதரர் கு.ஜமால் முஹம்மதுவும் KKSK கல்வி அறக்கட்டளை ஈரோடு சார்பில் தமிழக இஸ்லாமிய வரலாற்று ஆவணங்களை 2007இல் 232 பக்கங்களில் வெளியிட்டுள்ளனர்.

சி.எம்.ஏ. அப்துல் காதிர் கொங்குநாட்டு முஸ்லிம்கள் நூலை 158 பக்கங்களில் அதே அறக்கட்டளை சார்பில் அதே ஆண்டில் வெளியிட்டார்.

இஸ்லாமிய இலக்கியக் கழகம் ச.ரமீஜா பேகம் M.A., M.Phil எழுதிய ஈரோடு தர்க்காக்கள் ஒரு வரலாற்று ஆய்வு எனும் நூலை 2009இல் 176 பக்கங்களில் வெளியிட்டது.

சிராஜூம் முனீர் நற்பணி மன்றம் மத்ரஸா சிராஜூம் முனீர் இணைந்து கடையநல்லூர் முஸ்லிம் வரலாறு நூலை எனது பாசத்திற்குரிய அண்ணன் எஸ்.ஏ.முஹம்மது இபுராகிம் (சேயன் இபுறாகிம்) அவர்களை முதன்மை ஆசிரியராகக் கொண்டு கே.எஸ்.முஹம்மது அலி, கொ.மு.செய்யது மசூது, கே.எஸ். சாஹுல் ஹமீது ஆகியோரை ஆசிரியராகக் கொண்டு 924 பக்கங்களில் 2009இல் வெளியிட்டது. இலங்கை – கீழக்கரை இனிய தொடர்புகள் எனும் நூலை அண்ணன் மானாமக்கீன் 1998இல் 304 பக்கங்களிலும் நீடூர் நெய்வாசல் நெஞ்சங்கள் நூலினை 1990இல் 200 பக்கங்களிலும் தந்துள்ளார்.

வான்புகழ் காயல்பட்டணம் சரித்திரம் எனும் நூலை 1951இல் (ஹிஜ்ரி 1370) முஸ்லிம் ஹயர் எலிமெண்டரி ஸ்கூல் கமிட்டி

காயல்பட்டணம் வெளியிட்டது. இதன் ஆசிரியர் M.K.செய்யது அஹ்மது, நூல் 67 பக்கங்கள். அதனைத் தொடர்ந்து ஆர்.எஸ். அப்துல் லத்திபு M.A.,D.Litt, காயல்பட்டினம் 196 பக்கங்கள் (1993). The Concise History of Kayalpatnam எனும் ஆங்கில நூல் 314 பக்கங்கள் 2014, **காயல்பட்டினம் தான் காயல்** 2015 ஆகஸ்ட், 300 பக்கங்கள் எனும் மூன்று நூல்களைத் தந்துள்ளார்கள். கேப்டன் என்.ஏ.அமீர்அலி, கே.எம்.முஹம்மது ஹனீபா, கவிஞர் சண்முகம் எழுதிய இளையான்குடி வரலாறு 320 பக்கங்கள் 2006இல் வந்தது.

1953 இல் 95, சாந்தோம் ஹைரோடு, மைலாப்பூர், சென்னை 4 இலிருந்து Mrs.சுல்தானா அப்துல்லா M.A.,B.T. பதிப்பித்த நூல், சீதக்காதி வள்ளல். சென்னை பல்கலைக்கழக அரபி, பார்ஸி, உருதுத்துறை தலைமைப் பேராசிரியர் பழனி S.முஹம்மது ஹுஸைன் நயினார் எழுதியது. 61 பக்கங்களைக் கொண்டது. பல அரிய புகைப்படங்களுடன் கூடியது. செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து நூலினை அதே ஆசிரியர் அதே பதிப்பகத்தார் 1953இல் 36 பக்கங்களில் வெளியிட்டனர். மொத்தம் 61+36+60=157 பக்கங்கள். வெளிவந்த ஆண்டு 1953. நல்ல ஆய்வு நூல்.

அதில் பேராசிரியர் பெருந்தகை எஸ்.முஹம்மது ஹுஸைன் நயினார் விரிவாக எழுதுவார்.

'காயல்' என்ற பெயருடன் சேர்க்கப்பட்ட நான்கு ஊர்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றான சீதக்காதி வள்ளல் பிறந்திருப்பதனால் தத்தம் ஊரில் அவர் பிறந்தார் என்று உரிமை பாராட்டுவது இயற்கையேயாகும். **பழைய காயல், புன்னைக்காயல்** என்ற இரண்டு ஊர்களிலும் முஸ்லிம்களின் தொகை குறைந்திருப்பதனால் அவர்கள் வள்ளல் சீதக்காதி தம் ஊரில் பிறந்தார் என்ற சொல்ல முன்வருவதில்லை. கீழக்கரையிலும், காயல்பட்டினத்திலும் முஸ்லிம்கள் தொகை அதிகமாயிருப்பதனால் அவர்கள் வள்ளல் சீதக்காதியை தத்தம் ஊரில் தான் பிறந்தார் என்று வாதாடுகின்றனர்.

பொதுவாகப் பார்க்குமிடத்து ஒருவர் ஓரிடத்தில் வாழ்ந்தார் என்று நிலைநாட்டுவதற்கு அவருடைய பெற்றோர், முன்னோர், உறவினர் முதலியவர்களின் பிறப்பிடத்தை அறிவது

அவசியமாகும். சீதக்காதியின் தாயைப்பெற்ற பாட்டனாரான **வாவாலி மரக்காயர்** சீதக்காதியைப் பெற்றெடுக்க பெருந்தவம் புரிந்த மல்லாசாகிபு என்ற **பெரிய தம்பி மரக்காயரும்** கீழக்கரையிலே பிறந்தவர்கள். அவர்களது அடக்கஸ்தலம் கீழக்கரை பழைய குத்பா பள்ளியில் இன்றும் காணலாம். சீதக்காதியின் பந்துக்கள் கீழக்கரையிலே வசித்து வந்திருக்கிறார்கள். இன்று வரை அங்கேயே வாழ்ந்து வருகிறார்கள். சீதக்காதியின் அரண்மனை கல்வீடு சிதைந்த நிலையில் உள்ளது. அதன் அருகில் உமறுப்புலருக்கும், மக்தூம் சின்னயினா வலியுல்லா அவர்களுக்கும் சீதக்காதி வள்ளல் இனாமாக வழங்கிய இல்லங்கள் இருந்தன. ஸதக்கத்துல்லாவலி அவர்களுக்கும், உமறுப்புலவருக்கும் வள்ளலால் ஏற்படுத்தப்பட்ட கலியாண மகிமைப் பணம் இன்றும் நடந்து வருகிறது.

கல்லால், சிற்பவேலைகளுடன் காட்சி தரும் குத்பா பள்ளி கீழக்கரையில் சீதக்காதியால் கட்டப்பட்டது. இமாம் ஸதக்கத்துல்லாஹ் அடங்கிய இடத்திலும், பட்டத்து மரக்காயர் அடங்கிய இடத்திலும் சீதக்காதி கட்டிய வில்மச்சு மண்டபங்கள் உண்டு. சீதக்காதி நொண்டி நாடகத்தில் வரும் சிங்காரத் தோப்பு, தண்ணீர் பந்தல், பெரிய குத்பா பள்ளி இன்றும் உள்ளது. இவற்றால் சீதக்காதி கீழக்கரையில் பிறந்து வாழ்ந்தவர் என்று பேராசிரியர் எஸ்.முஹம்மது ஹூசைன் நயினார் உறுதிபடக் கூறுவார்.

சேதுநாட்டு பெரியதம்பி வள்ளல் சீதக்காதி என்று கவிஞர் ச.சி.நெ.அப்துல் ஹக்கீம், நவீனம் ச.சி.நெ.அப்துல் றஸாக் எழுதிய நூலும் (1991) 197 பக்கங்கள் உண்டு. ந.இளங்கோவின் நொண்டி நாடகம் நூல் (1992) பக்கங்கள் 124, இவரும் சீதக்காதி பிறந்து வாழ்ந்தது கீழக்கரை என்று சொல்வார்.

சீதக்காதி திருமண வாழ்த்து நூலில் (200 பக்கங்கள்) பக்கம் 25இல் (1996) பேராசிரியர் மு.இ.அகம்மது மரைக்காயர், வகுதை, காயல், தென்காயல், வச்ரநாடு, செம்பிநாடு, இந்தப் பெயர்கள் அனைத்தும் உணர்த்தும் ஊரே வள்ளல் சீதக்காதி பிறந்த ஊர் என்பார். பக்கம் 35ல் சீதக்காதி பிறந்த ஊர் கீழக்கரையே என்று ஐயத்திற்கிடமின்றி அறியலாம் என்பார் வள்ளல் சீதக்காதியின் வாழ்வும் காலமும் நூலில் (205 பக்கங்கள்) (1983) கேப்டன் என்.ஏ.அமீர் அலி கீழக்கரையே சீதக்காதி பிறந்த

ஊர் என்பார். முகம்மது முஸ்தபா எழுதிய ஈதலறம் பேணிய சீதக்காதி செப்டம்பர் 1968 இல் 32 பக்கங்களைக் கொண்டு வெளியானது. அதுவும் கீழக்கரைதான் என்று பறைசாற்றும். செந்தமிழ் வள்ளல் சீதக்காதி எனும் நூல் 2000இல் எனது இனிய அண்ணன் டாக்டர் எஸ்.எம்.காமல் அவர்களால் 206 பக்கங்களில் வெளிவந்தது. அவர்களும் கீழக்கரையில் பிறந்தவர் சீதக்காதி என்றுரைப்பார்கள்.

கலைமாமணி அண்ணன் கவிஞர் கா.மு.ஷெரீப் வள்ளல் சீதக்காதி வரலாறு எனும் நூல் 1981இல் 225 பக்கங்களில் வெளியிட்டார்கள். அதிலும் வள்ளல் சீதக்காதி கீழக்கரையில் பிறந்தவர் என்பர்.

ஆனால் 1946இல் யார்க்கும் அன்பர் சீதக்காதி எனும் காயல்பட்டணம் எம்.முஹம்மது ஹஸன் எழுதிய 5 அணா விலை கொண்ட 24 பக்கங்களைக் கொண்ட நூலில் (திருநெல்வேலி பேட்டை கையூம் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது) காயல்பட்டணத்தில் சீதக்காதி பிறந்தார் என்பார்கள். சீதக்காதியும் செந்தமிழ் புலவரும் என்ற வர்தா பதிப்புக் கழகம் சென்னை 1961 இல் வெளியிட்ட கே.எம்.கே.அப்துல் காதர் எழுதிய 106 பக்கங்களைக் கொண்ட நூலில் சீதக்காதி காயல்பட்டிணத்தில் பிறந்தார் என்று கூறுவார்.

1986இல் எம்.இத்ரீஸ் மரைக்காயர் எழுதிய கீர்த்திமிகும் கீழக்கரை நூல் 186 பக்கங்களைக் கொண்டது. அதில் சீதக்காதி பிறந்தது கீழக்கரை என்பார்கள். எம்.இத்ரீஸ் மரைக்காயர் 1990இல் எழுதி வெளிவந்த நூல் நானிலம் போற்றும் நன்னகர் 158 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் வள்ளல் சீதக்காதி பிறந்தது கீழ்க்கரை என்பார்.

எனது பி.எச்.டி. ஆய்வு வழி காட்டியான பேராசிரியர் டாக்டர் ஏ.ஹெச்.முகைதீன் பாதுஷா எழுதிய Kilakarai Through The Ages நூல் 2011இல் ஆங்கிலத்தில் வெளிவந்தது. அதன் இரண்டாம் பதிப்பு 2012. பக்கங்கள் 272. இதில் 73, 74,இல் சீதக்காதி பிறந்தது கீழக்கரை என்பார்.

இவற்றில் நாம் சரியான ஆதாரங்களைத் தேர்ந்தெடுத்தல், தேடுதல் என்பது தங்களுக்கு நான் சொல்லாமலேயே விளங்கும். தனி நபர் முன்னிருத்தப்பட்டாலும், சீதக்காதி பிறந்த

ஊர் எதுவென தெளிவாகத் தெரிவதற்கு பேராசிரியர் பழநி எஸ்.முஹம்மது ஹூசைன் நயினார் தரும் சான்றுகள் மிகுந்த நம்பிக்கையூட்டுவனவாக உள்ளது. எனவே அதனை நாம் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். இப்படித்தான் சரியான ஆதாரங்களைத் தேடுவதற்கு வழிமுறைகளைக் காணமுடியும்.

கேள்வி 5: **வரலாறு என்பது இதுவரை அரசர்கள், நிலஉடமையாளர்கள் என ஆளும் வர்க்க வெற்றிகளின் பதிவுகளாகவே இருக்கின்றன. அடித்தட்டு மக்கள் வரலாறு வெறுமனே நினைவோடைகளாகவே எஞ்சியுள்ளன. இதை எப்படி ஈடுகட்டுவது?**

ஜெர்மானிய நாட்டு நாடக ஆசிரியரும் கவிஞருமான பெர்ட்டோல்ட் பிரெஷ்ட் (Bertold Brecht 1898-1956) *படிப்பறிவுள்ள* **பாட்டாளியின் கேள்விகள்** *என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் கேட்பார்.*

ஏழு நுழைவாயில்கள் கொண்ட தேவன் நகரத்தைக் கட்டியது யார்? வரலாற்றுப் புத்தகங்களில் உள்ளது. அரசனது பெயர்கள், அரசர்களா சுமந்து வந்தனர், கட்டிட வேலைக்கான கற்களை ..... பலமுறை நிர்மூலமாக்கப்பட்டது பாபிலோன் நகர். மீண்டும் மீண்டும் அதை நிர்மாணித்தவர் யார்? பொன்கதிர் வீசும் லிமா நகரத்தில் எவ்விதமான வீடுகளில் வாழ்ந்தனர் தொழிலாளிகள். மாலையில் எங்கே சென்றனர். சீனச் சுவர் கட்டி முடித்ததும் கொத்தர்கள்?

மாபெரும் ரோம் நகரத்தில் எங்கும் வெற்றி வளைவுகள், அவற்றைக் கட்டியவர் யார்? யாரை வென்றனர் சீஸர் பேரரசர்கள்? பெருமளவில் புகழப்பட்ட பைஸான்ஸ் நகரத்தில் குடிமக்கள் எல்லோரும் மாடமாளிகையிலா இருந்தனர். இதிகாசப் புகழ் அட்லாண்டிக் கடல் விழுங்கிய இரவில் மரணத்தின் பிடியிலிருந்தோர் அடிமைகளின் உதவியை நாடிக் கூக்குரல் இடவில்லையா? இளம் அலெக்ஸாண்டர் இந்தியாவை வென்றான். அவன் தனியாகவா? அப்போது ஒரு சமையல்காரன் கூடவா இல்லை அவனோடு.

ஸ்பெயின் நாட்டு அரசன் அழுதான். அவனுடைய கப்பல் சாகரத்தில் மூழ்கும்போது வேறு யாரும் அழவில்லையா? இரண்டாவது பிஃரெடரிக் ஏழு ஆண்டுப் போரில் வென்றான். அவனைத் தவிர வேறு யார் வென்றார்கள். ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு வெற்றி, வெற்றி விழா உணவு சமைத்தவர் யார்? பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இவர்களின் செலவுக்கு முதலீடு செய்தவர் யார்?

பதிவு செய்யப்படாத அடித்தள மக்களின் சமூக – பொருளியல் பண்பாட்டுப் போக்குகளைத் தெளிவுபடுத்திக் கொள்ள படிக்க வேண்டிய முதல் பாடமே, சமூக வரலாறு என்ற பெயரில் அறிவுலகத்தின்பால் திணிக்கப்பட்ட – திரிக்கப்பட்ட வரலாற்றைப் புரிந்து கொள்வதுதான்.

கிடைத்திருக்கின்ற தரவுகளைக் கொண்டு உண்மையான ஒருபுறச் சார்பில்லாத வரலாற்று வாழ்நிலைப் போக்குகளை அறிந்து கொண்டால்தான் அதில் இளையோடிக்கிடக்கும் அடித்தள மக்களின் வரலாற்றினைப் புரிந்து கொள்ள முடியும். கடந்த நூற்றாண்டுகளுக்கான சமூக வரலாறு மட்டுமல்லாது, தரவுகள் கிடைத்திருக்கின்ற காலத்திலிருந்தே வரலாறு திருத்தி எழுதப்படவேண்டும். அப்படி எழுதப்படும்போது அடித்தள மக்களின் வாழ்க்கைபற்றிய விவரங்கள் தாமாகவே வெளிப்படும். இதற்காகத் தரவுகள் (சான்றுகள்) இல்லையே என்று தேடித்திரிய வேண்டியதில்லை. இதில் உள்ள இடைவெளிகளை இட்டுச் சீராக்க வாய்மொழி வரலாறு துணை நிற்கும். அடித்தள மக்களின் வரலாற்றினைக் காட்டக்கூடிய தரவுகள் பெரும்பாலும் வாய்மொழி இலக்கியங்களாகவே இருக்கின்றன. இவற்றை நுணுக்கமான பார்வையினாலும், சீரிய ஆய்வு முறைகளினாலும் பகுத்தறிய வேண்டும். அத்தகைய ஆய்வுகளில் ஈடுபட்டு அடித்தள மக்களின் வரலாற்றினை, இதுவரை புறக்கணிக்கப்பட்ட பிரிவினரின் வாழ்நிலையை வரையறுக்கலாம் என்பர் எனது இனிய நண்பர் மே.து.ராசுகுமார். இந்த அடிப்படையில் எழுதப்பட்ட நூல் எனது பிரியத்திற்குரிய பேராசிரியர் நண்பர் ஆ.சிவசுப்பிரமணியன் எழுதிய அடித்தள மக்கள் வரலாறு 2002இல் 304 பக்கங்களில் வந்த நூல் இது. அடியேன் ஏற்கனவே மருதநாயகம் குறித்தும், கட்டப்பொம்மன் குறித்தும் நாட்டுப்புறப் பாடல்கள் தரும் வரலாற்றுச் செய்திகளை ஏற்கனவே சொல்லிவிட்டேனே!

கேள்வி 6 : **அரசு அளிக்கும் கலைமாமணி, சாகித்ய அகாதெமி விருதுகள், பத்திரிகைகள், இலக்கிய அமைப்புகள் வழங்கும் கௌரவங்களும் எழுத்தாளருக்கு உத்வேகத்தை தருகிறது. தங்களுக்கு அவ்வாறான அங்கீகாரங்கள் கிடைத்தனவா?**

அரசியலில் அடியேன் ம.தி.மு.க. என்ற இயக்கத்தில் இருப்பதால் அரசாங்க விருதுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை, வழங்கப்படவில்லை, தரப்படவில்லை, அடியேன் முயன்று இருந்தால் அதனைப் பெற்றிருக்க முடியும். எனக்கு மிகவும் வேண்டியவர்களே அமைச்சர்களாக இருந்தனர். ஆனால் அவைகளை வழங்கினால் பெறுவதே தவிர, வாங்கிடப் பிரியமில்லை.

விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள் நூலுக்கு சீதக்காதி அறக்கட்டளையின் ஷேக் ஸதக்கத்துல்லாஹ் அப்பா பரிசினை (மாநில அளவில்) 1994இல் பெற்றேன். ‘உணர்வு’ வார இதழ் நடத்திய மாநிலந்தழுவிய போட்டியில் ‘நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப்’ நூலுக்கு முதற்பரிசு பெற்றேன். தமிழர் தலைவர் வைகோ அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ‘சங்கொலி’ வார இதழ் நடத்திய ‘பழந்தமிழர் கல்வி முறைகள்’ பற்றிய மாநிலந் தழுவிய போட்டியில், இதன் நடுவர் குழுவிற்கு கண்டிப்பிற்கு பேர்போன அறிஞர் பேராசிரியர் இளவரசு தலைமை. இதிலும் முதற்பரிசு பெற்றேன்.

காரைக்கால் பேராசிரியர் இனிய நண்பர் சாயபு மரைக்காயர் நடத்திவரும் இஸ்லாமிய இலக்கிய அமைப்பு தமிழ்மாமணி விருது வழங்கி கௌரவித்தது. கவிக்கோ அப்துல் ரகுமான் தலைமையில் செயலாற்றிவரும் இஸ்லாமிய இலக்கியக்கழகம் உமறுப்புலவர் விருதும், 50000 ரொக்கப்பரிசும் வழங்கியது. மறுமலர்ச்சி திமுகழகப் பொதுச்செயலாளர் வைகோ எளியேனை நடமாடும் கணிப்பொறி என்பார்கள்.

வரலாற்றியல் அறிஞர் என்று பேராசிரியர் எனது இனிய தோழர் தொ.பரமசிவம் எனது பெயரைக் குறிப்பிட்டு எழுதி, அவரது புதல்வியாரின் திருமண அழைப்பிதழைத் தந்தார். அதனைப் பத்திரமாக வைத்துள்ளேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பே பிரபல எழுத்தாளர் எனக்கு பிரியமான நண்பர் பிரபஞ்சன் தினமணி ரம்ஜான் மலரில் ஔரங்கஜேப் குறித்து எழுதிய கட்டுரையில் என்னைக் குறிப்பிடும்போது வரலாற்றறிஞர் என்று குறிப்பிட்டிருந்தார். தமிழறிஞர் பண்பாளர் மூத்த முன்னோடி ச.வே.சுப்பிரமணியன் அவர் தமிழூரில் நடத்திய விழாவில் ‘வரலாற்றுப் பேரறிஞர்’

என்ற பட்டத்தினைத் தந்தார். வேலூர் புரட்சியில் வீரமிகு முஸ்லிம்கள் நூலினை வெளியிட்ட (எனது அனுமதி இல்லாமல்) குமுதம் (2013) (128 பக்கங்கள்) பதிப்புரையில் அடியேனைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டு திரு.பா.வரதராசன் அவர்கள் எழுதியது. இதோ அந்த வாசகங்கள்.

நீலகண்டசாஸ்திரியும், சதாசிவப்பண்டாரத்தாரும் வரலாற்று நூல்களை எழுதுவதில் சாதனை படைத்தவர்கள், திவானும் அவர்களுக்கு ஒப்பானவராகவே இருக்கிறார்.

இது குமுதம் தந்த பாராட்டு. விகடன் குழுமம் எனது மூன்று வரலாற்று நூல்களை அவர்களாகவே மறுபதிப்பு செய்தார்கள். (ஔரங்கஜேப், மருதநாயகம், மாலிக்காபூர்)

எல்லாவற்றிற்கும் மேலாக சமநிலைச் சமுதாயம் ஆசிரியர் ஜாபர் சாதிக் பாகவியும், தாங்களும் கலந்து கொண்ட 9.4.2016 சென்னை சிராஜ் அரங்கில் இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீபா நூல் வெளியீட்டு விழாவில், கவிக்கோ அப்துல் ரகுமான் இந்த மக்கள் மன்றத்தின் சார்பாக தம்பி திவானுக்கு டாக்டர் பட்டம் வழங்குகிறேன் என்றாரே, அதுவே எனக்கு பெரிய விருதுதான். “பெரிசா எழுதுராரு சாகித்ய அகாதெமி விருதுகூட வாங்கலியே என்பார் எனது துணைவியார்” இறைவன் நாடினால் என்றாவது சாகித்ய அகாதெமி விருது கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே செயலாற்றி வருகிறேன்.

கேள்வி 7: **வரலாற்றெழுத்தியல் என்பதற்கு உரிய துறைசார் வரையறைகள் என்ன? வரலாற்று நூல்கள் எழுதுவதற்காக தாங்கள் நேரில் கள ஆய்வுக்குப் போன இடங்களைப் பற்றி?**

குறிப்பிட்டு எந்த இடங்களைச் சொல்ல, அடியேன் கள ஆய்விற்காக தமிழகம் முழுவதும் சென்றிருக்கிறேன். அதில் எதைச் சொல்ல? எதைவிட?

வரலாற்றெழுத்தியல் என்பதற்கு உரியதுறை சார் வரையறைகள் குறித்து கேட்கிறீர்கள். இது பெரிய கேள்வி.

வாய்மொழி வரலாற்றையும் நாட்டார் பாடல்கள் பற்றியும் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அதனை திரும்பவும் சொல்லப்போவதில்லை. A STUDY OF HISTORY என்ற நூல் ARNOLOD J TOYNBEE யால் எழுதப்பட்டு 1946லும்,

1957லும் இருபாகங்களாகவும் பின்னர் முழுமையாக 1960 லும் வெளிவந்தது. பதிமூன்று அத்தியாங்களைக் கொண்ட விரிவான இந்த நூல் 1003 பக்கங்களைக் கொண்டது. Greek Historical Thought எனும் மற்றொரு நூலையும் 1952இல் 208 பக்கங்களில் ஆர்னால்டு டாயின்பி தந்துள்ளார்.

வரலாறு என்றால் என்ன? ஈ.செ. கார் 'What is History' (E.H.Car) ஆங்கில நூலை பேராசிரியர் நா.தர்மராஜன் மொழி பெயர்த்துள்ளார். அலைகள் வெளியீட்டகம் அதனை 2004இல் 176 பக்கங்களில் வெளியிட்டது. எனது மனங்கவர்ந்த சரித்திரப் பேராசிரியர் நா.சுப்பிரமணியம் (N.Subramanian) அதற்கு நீண்ட முன்னுரை 10 பக்கங்களில் எழுதியுள்ளார். சுப்பிரமணியம் எழுதிய Historiography நூல் ஆங்கிலத்தில் 1973இல் வெளியானது. 434 பக்கங்ககளைக் கொண்டது. அது தமிழிலும் 1979இல் வெளிவந்தது. 304 பக்கங்களில் வரலாற்றுக் கோட்பாடுகள், வரலாற்றின் இலக்கணம், வரலாற்றின் எல்லை வரையறையும் வகைகளும், வரலாறும், தொடர்புடைய பிற இயல்களும், வரலாறு விஞ்ஞானமா? கலையா? வரலாற்றின் புறநோக்குத்தன்மை, வரலாற்றின் நிருணயத்தன்மை, வரலாற்றின் நிருணயத்தன்மை, வரலாற்றுத் தத்துவம், முன்னியக்கம், வரலாற்றின் இரு கண்களான இடம், காலம், காரணகாரியத் தொடர்பு, வரலாற்றியம், வரலாற்றுச் சார்பியம், வரலாற்று வரைவியலின் வரலாறு.

கிறிஸ்துவிற்கு முந்திய கிரேக்க, ரோமானியரல்லாத பிற மரபுகள், பண்டைய ஐரோப்பியச் செம்மரபு, சமய நோக்குக் காலம், இடைக்காலம், நவீனகாலம், மானுடகாலம், சமயச்சீர்திருத்தம், அறிவெளிக்காலம், கற்பனை வளர்ச்சிக்காலம், அண்மைக்காலம், தற்காலம், முறையியல், ஆய்வுரை இயற்றல் என்று சொல்லிச் செல்வார்.

பேராசிரியர் ந.சுப்பிரமணின் கூறுவார் வரலாறு என்பது இரண்டு தூண்களால் தாங்கப்பெற்று நிற்கின்றது.

1) நிகழ்ச்சிகள் (பொருள்கள்) Facts இதற்கு ஆதாரம் என்பர். அதனை உண்மை எனல் சிறந்தது. வரலாற்றை வரைவதற்கு நமக்கு உதவும் வேர்கள் ஆதாரம். அவைகளில் மிகமிகப் பெரும்பான்மையே வரலாற்றாளன் நேரில்

அறியான். நம்பத்தக்கவை நம்பப்படும் சான்றுகள் வாயிலாகப் பெற்றுக்கொள்ளப்பட்டவை.

2) அந்நிகழ்ச்சிகளைப் பற்றிய முடிவுகள், அறத்தீர்ப்புகள், மதிப்புகள், பொருள் கோள்கள் முதலியன. இவை வரலாறு வரைவோனின் உள்ளத்தில் உள்ள எண்ணிறந்த விளைவுகளாலும், சொந்த நிகழ்ச்சிகளாலும், அனுபவத்தாலும் தீர்மானிக்கப்பட்டவை. இவ்விரு தூண்களுக்கும் இடையே இடையறாது நடந்துவரும் வேறுபாட்டுப் போர்கள் வரலாறு. இதைத்தான் அறிஞர் அண்ணா அழகாகச் சொல்வார்.

"ஆண்டான் – அடிமை; உயர்ந்தவன் – தாழ்ந்தவன்

மதகுரு – பக்தன்; முதலாளி – தொழிலாளி

மிராசு – உழவன்"........

இவர்களுக்கிடையே நடைபெற்ற வர்க்கப் போராட்டங்களே உலக வரலாறு என்பார்.

வரலாறு மனிதனுடைய பரிணாமத்தின் கதை. ஒரு மாக்கடல். அது மிகப் பரந்ததும் ஆழந்ததும் ஆம். அறிவுலகில் வரலாற்றறிவின்றி ஓர் அணுவும் அசையாது. வரலாறு கற்பனைக் கதையன்று, உண்மை என்று நம்பத்தகுந்த சான்றுகளின் உதவி கொண்டு நாம் ஏற்றுக்கொள்ளும் ஒரு செய்தித் தொகை. இது நாளாக நாளாக வளர்ந்து கொண்டே வரும். அவற்றை உரைநடையாலும் எழுதிப்பொருளும் தருபவன் வரலாற்றாளன். அவை எப்போது தொடங்கியது? எப்போது முடியும்? யாரால் தொடங்கப்பட்டது? யாரால் முடித்து வைக்கப்படும்? யாருக்கும் தெரியாது. கி.மு. (484–408) இல் வாழ்ந்த ஹிராடடஸ் (Herodotus) வரலாற்றின் ஆதித்தந்தை என்பார்கள். அதற்கு முன்பு இருந்ததை இறைவனே அறிவான். வி.எஸ்.வி. இராகவனின் ஹிராடடஸ் 1982, 582 பக்கங்கள், George Rawlinson மொழிபெயர்த்த Histories எனும் 734 பக்கங்களைக் கொண்ட 1996இல் வெளிந்த நூலையும் வாசியுங்கள். ஆனால் **நிகழ்ந்தது கூறுல்தான் வரலாறு.** அதில் அறப்பொருள்கண்டு போதிப்பது அல்ல என்பார் ஜெர்மானிய வான்ராங்கே (Von Ranke)

வரலாற்றிற்குப் இரு பண்புகள், கடமைகள் உள. நிகழ்ந்ததைக் கூட்டிக் குறைத்துப் பெருக்கி, வகுத்து விருப்பப்படி வண்ணம்

பூசித்தான் சொந்த தேசம், சமயம் முதலியவற்றால் பிறந்த கருத்துக்களை வரலாறு என்று கூறுவது தவறு என்று உணர வேண்டும். நிகழ்ச்சிகளை முறையாகத் தொகுத்து, கற்பார்க்கு சிந்திக்க விட்டு விடவேண்டும். சமயவாதிகள் தத்தம் சமயக் கொள்கைகளை அறிவித்தல் போல வரலாற்றாளனும் **மக்களுக்கு உண்மை என்று தாம் அறிந்தவாறு அறிவிக்க வேண்டும்.** வரலாறு இன்னும் முற்றுப்பெறவில்லை. முற்றுப்பெற்றபின் விடை தருவாரில்லை, தருவாரிரார்.

ஈ.எச். கார் எழுதிய நூலில் வரலாற்று ஆசிரியரும் வரலாற்று ஆதாரங்களும் சமூகமும் தனிநபரும், வரலாறு அறிவியல் மற்றும் அறவொழுக்கம், **வரலாற்றில் காரண காரியம்,** வரலாறு என்பது முன்னேற்றம் வரலாறு விரிவடையும் (தொடு) வானம் என்ற தலைப்புகளை வாசிப்பது நல்லது. கவிஞர் ஆண்ட்ரூ மார்வெல், (1621-1678) இங்கிலாந்தின் ஆலிவர் கிராம்வெல்லை வாழ்த்திப் பாடினார்.

சிதறிப் போன காலத்தின்
வலிமையைத் திரட்டினான்
ஒரு யுகத்தின் பணியை
ஒரு ஆண்டில் செய்தான் என்று
சாமுவேல் ஜான்சன் அதற்கு எதிராக எழுதினார்.

அரசர்கள் அல்லது சட்டங்கள் நிறைவேற்றியவற்றில் எவ்வளவு சிறிய பகுதி நம் இதயங்களில் நிலைக்கிறது. R.G.Colling Wood எழுதிய The Idea of History (1946) 339 பக்கங்கள் நூலையும் வாசிக்கலாம். Tamilian Historiography எனும் N.சுப்பிரமணியனின் ஆங்கில நூலையும் (1988) 252 பக்கங்கள் வாசிக்கலாம். வரலாற்றுக் கோட்பாடும் முறையியலும் எனும் பேராசிரியர் கு.ராஜய்யன் சூ.அ.தங்கசாமி நூலையும் வாசித்திடலாம். Scientific Method Applied of History எனும் J.A.Froude நூலையும் (இலண்டன்) (1895) (100 பக்கங்கள்) History: ITS Theroy and Method எனும் பேராசிரியர் பி.ஷேக் அலியின் (1978) ஆங்கில நூலையும் (472 பக்கங்கள்) வாசிக்கலாம்.

பேராசிரியர் இர்ஃபான் அபீப் 1988 செப்டம்பர் 19இல் நிகழ்த்திய மார்க்சிய வரலாற்றியல் பிரச்சினைகள் 48 பக்கங்கள்

மற்றும் வரலாற்றியல் பிரச்சனைகள் (72 பக்கங்கள்) நூலையும் வாசிக்கலாம். அண்மையில் மறைந்த எனது பிரியத்திற்குரிய பேராசிரியர் முனைவர் வீ.மாணிக்கம் ஆங்கிலத்தில் On History and Historiography மெய்ப்பொருள் காண்பதறிவு – வரலாறு எனும் நூல் (2003) (472 பக்கங்கள்) அதுவே தமிழில் வரலாறும், வரலாற்றியலும் (நவம்பர் 2010) 391 பக்கங்களில் வெளிவந்துள்ளது. ஒரு வரலாற்றாய்வாளன் அவசியம் படிக்க வேண்டிய நூல் இது. இன்னும் சொல்லிக்கொண்டே செல்லலாம்.

கேள்வி 8: **நூறு நூற்கள் தாங்கள் எழுதியுள்ளதில் ஒரு தொடர்ச்சியைக் காண முடிகிறது. இன்னும் இத்துறையில் செய்து முடிக்க வேண்டியவை என்ற திட்டம் ஏதும் உண்டா? பொதுவாக தென் மாவட்டங்களில் இருந்து அதிக அளவில் ஆய்வாளர்கள் இருப்பதன் காரணங்கள் யாவை?**

1921 மலபாரில் மாப்பிள்ளைமார் புரட்சி குறித்து ஆயிரம் பக்கங்களில் எழுதிட ஆவணங்கள், சான்றுகளைத் திரட்டி வைத்துள்ளேன். பல ஆண்டுகளாக கேரளத்தின் பல பகுதிகளில் கள ஆய்வும், இலட்சக்கணக்கில் இதற்கென செலவும் செய்திருக்கிறேன். அந்த நூல் எழுதிட வேண்டும். அதுபோல 1930 உப்புச்சத்தியாகிரகப் போரில் முஸ்லிமகள் பங்களிப்பு, 1942 வெள்ளையனே வெளியேறு இயக்கம் என சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்களிப்பு குறித்தும் எழுத இருக்கிறேன். இதுவரை எழுதிய 2000 பக்கங்களோடு இதுவும் 2000 பக்கங்கள் வரும். இது எனது மனதில் உள்ள திட்டம். தென்மாவட்ட திராவிட இயக்கங்களின் அடிக்கற்களாகத் திகழும், திகழ்ந்த, மறைந்த மாவீரர்கள் பற்றியும் எழுதிட எண்ணியுள்ளேன்.

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலிச் சீமை என்பது தேவார காலத்திலே இருந்து வந்துள்ளது. தென் மாவட்டங்களில் அதிக அளவில் சாகித்ய அகாதெமி விருது பெற்றவர்கள் உள்ளனர். பாதிக்கும் மேல் தென்மாவட்டத்துக்காரர்களே. இறைவனின் விருப்பம் இதுபோலும் இங்குள்ள காரணங்கள், ஆதிச்சநல்லூர், கொற்கை, பாஞ்சாலங்குறிச்சி, நெற்கட்டுஞ்செவல், காளையர் கோவில், திருப்பத்தூர், மதுரை எல்லாமே தெற்குச் சீமைதானே. அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

கேள்வி 9 : **சமூக ஸ்திரத்தன்மையை பொருளாதாரமே அளிக்கிறது. சில இலட்சம் மக்கள் தொகை கொண்ட மார்வாரி, குஜ்ராத்தி வட இந்திய பனியாக்கள் இங்கு தமிழகத்தில் அமைதியாக இயங்குவதால் வளமானவர்களாக இருக்கின்றனர். கோடியை நெருங்கிக் கொண்டிருக்கும் தமிழக முஸ்லிம்கள் வெறுமனே அரசியல், இயக்கம் என தங்களின் ஆற்றலை வெவ்வேறு முகாம்களில் விரயமாக்கி வருகின்றனரே என்கிற ஐயம் உண்டாகிறது! வரலாற்று ஆய்வுகள் இதை சரிகாண்கிறதா?**

தாங்களின் ஐயம் முற்றிலும் ஒதுக்கிவிடத்தக்கதல்ல. வரலாற்று ஆய்வுகள் மூலம் இதை எவ்வாறு சரிகாண முடியும் என்று தாங்கள் கருதுகிறீர்கள்?

பிரியாணி சாப்பிட்டு ஜீரணக்காத நிலையில் இருப்பவனுக்கு அல்வா வாங்கித் தரும் சமூகம், பசியோடு இருப்பனுக்கு பருகுவதற்கு தேநீர்கூட வாங்கிக் கொடுக்க யோசிக்கும் சமுதாயம். தமிழகத்தில் எத்தனை முஸ்லிம் கோடீஸ்வரர்கள் இருக்கிறார்கள். இது போன்ற ஆய்வுக்கு முன்வருவது சிங்கப்பூர் காதிர் சுல்தான், ஓசூர் அன்வர் பாட்சா என்று ஓரிருவர்தான், அதுவும் முழுமையாக அல்ல. நமது பாரம்பரியத்தை, தியாகத்தைச் சொல்லிட விரிவான ஆய்வுகள் இன்னும் வேண்டும். இதற்கு பணவசதி படைத்தோர் உதவிட, ஊக்குவித்திட வேண்டும்.

அப்போதுதான் வாழ்வாங்கு வாழ்ந்த சமுதாயம் எவருக்கும் எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல நாம் என்பதனை நிரூபித்திட இயலும்.

கேள்வி 10 : **வரலாறு என்றவுடன் சாண்டில்யன் என்பதாக புரிதல்களை எளிமைப்படுத்தி கொண்டு ஒரு சமூகம் வாழ்ந்துவருவது துரதிர்ஷ்டம் சரியான வரலாற்று நூல்கள் சிலவற்றை பட்டியலிடவும்?**

முன்னர் குறிப்பிட்ட கர்னல் வெல்ஷின் இராணுவ நினைவுகள் Robert Orme *எழுதிய* A History of the Military Transactions of the British Nation in Indostan From the year 1745.

To Which is prefixed a dissertation On the Establishments Made by Mahomedan conquerors in Indostan III *வால்யூம்கள். இரண்டு வால்யூம்கள் ஆங்கில உரைநடை. மூன்றாவது வால்யூம்*

படங்கள். இது இலண்டனில் 1803 இல் அச்சிடப்பட்டு, சென்னையில் மறு அச்சு 1861. லோரி காலின்ஸ், டொமினிக் லேப்பியர் எழுதிய Freedom at Midnight, *முதற்பதிப்பு 1976,* Mission with Mount Batten - Alan Campbell Johnson, *1951இல் வெளியிட்ட நூல். கு.இராஜய்யனின் சவுத் இண்டியன் ரிபல்லியன் (தென்னாட்டுப்புரட்சி)* History of Freedom Movement in India. Vol I, Vol II, Vol III, Prof. R.C.Majumdar (Total 2020 Pages)*போதுமா? 1830 இல் இந்தோஸ்தான் என்றுதான் நாட்டின் பெயர் உள்ளதைக் கவனித்தீர்களா?*

கேள்வி 11 : **இவ்வளவு எழுதி குவித்துள்ளீர்கள். மலைப்பாக உள்ளது. தங்களுக்கான தரவுகளை, மூல நூல்களை எங்கிருந்து பெறுவீர்கள்? தங்களின் நூல்களுக்கு வரலாற்றுக் கால எல்லை வரையறுத்துக் கொண்டு தொடங்குவீர்களா?**

ஆவணக் காப்பகங்களில், நூலகங்களில், வாழும் மூத்தவர்களின் பேட்டிகளில் இருந்து தரவுகளைப் பெறுகிறேன். குஞ்ஞாலி மரைக்காயர் குறித்து விரிவான நூல் எழுதியுள்ளேன். அதற்காக குஞ்சாலி மரைக்காயர் வாழ்ந்து மறைந்த அடக்கமாகியுள்ள **இரிங்கல்** *கோட்டக்கல் வரை சென்றேன். 21 நாட்கள் அங்கு ஆய்வினை மேற்கொண்டேன். விவரங்களைச் சேகரித்தேன். இப்படித்தான் பணி தொடர்கிறது.*

வரலாற்றுக்கால எல்லை வரையறுத்துக்கொண்டு இதுவரை எழுதவில்லை. கட்டபொம்மனையும் எழுதியிருக்கிறேன், பாரதியையும் எழுதியிருக்கிறேன். பட்டுக்கோட்டை அழகிரியையும், வஉசியையும் வரைந்துள்ளேன். மாலிக்காபூர் பற்றியும், மருதநாயகம் பற்றியும் முகலாயப் பேரரசர் ஔரங்கஜேப் குறித்தும் எழுதியிருக்கிறேன்.

கால வரையறை என்று எதுவும் இல்லை, எது மனதில் தோன்றுகின்றதோ அதை எழுதுவேன், உண்மையை எழுதுவேன், எழுதுகிறேன்.

கேள்வி 12 : **தங்களிடம் அரிய வரலாற்று ஆவணங்கள் ஏதும் உண்டா? வரலாற்று ஆதாரங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் பற்றி?**

நிறைய உண்டு. அவைகளை அதனைப் பாதுகாத்திடும் பொறுப்பு இருப்பதால் விரிவாகசொல்ல இயலாது!

சான்று: மகாகவி பாரதியார் எழுதிய கடிதமும், பாடலும் அவரது கையெழுத்திலேயே மூலப்பிரதியே சில என்னிடம் உள்ளது.

கேள்வி 13 : **தமிழகத்திலும் - வேறு இந்திய நகரங்களிலும் உள்ள வரலாற்று அருங்காட்சியம் பற்றி சிறு குறிப்புகளைத் தரவும்?**

சென்னையில் கன்னிமாரா நூலக வளாகத்தில் அமைந்துள்ள அருங்காட்சியகம். ஆய்வு நேரத்தில் பார்ப்போமானால் ஒரு நாளில் முழுவதுமாகப் பார்த்துவிட முடியாது. தீரன் திப்புசுல்தான் பயன்படுத்திய வாள்கள், பீரங்கிகள் இன்ன பிற வரலாற்று அரும் பொருட்கள் அங்கு காணலாம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (Tamil Nadu Archives Madras) மிகச்சிறப்பானது. இதில் பல ஆண்டு காலம் சென்று எனது ஆய்விற்குரிய விஷயங்களைச் சேகரித்துள்ளேன். (Madras Record Office 1909 என்ற முகப்பு பலகை தொங்கும் இன்று வரை செயலாற்றி வருகிறது. இங்கு 60 **இலட்சத்திற்கு** அதிகமான கோப்புகளும், 6 இலட்சத்திற்கும் அதிகமான நூல்களும் உள்ளது. எளியேனது ஆய்விற்குப் பெரிதும் பயன்பட்ட இடம் இதுதான். 1947 ஆகஸ்ட் 15 இந்திய சுதந்திரத்திற்குப் பின் இங்கு ஆவணங்கள் முறையாகத் தொகுக்கப்பட்டும், சேகரிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் **வரும் நிலை இல்லை** என்பது வேதனைக்குரியது. தென்கிழக்கு ஆசியாவிலேயே வரலாற்றெழுத்தியலுக்குப் பெரிதும் பயன்படும் ஆவணக்காப்பகம் இது. கிபி 1642 ஆண்டின் டச்சு ஆவணங்கள் இங்கு உள்ளது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன் எவ்வளவு மிகப்பழைய ஆவணங்கள் இருக்குமென்று.

இந்தியாவில் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் நாகார்ச்சுனன் என்ற மன்னர் உருவாக்கிய நாகார்ச்சுன வித்தியாபீடம் ஆந்திர மாநிலம் குண்டூரில் இருந்தது. இதில் 84000 உரையாடல்கள் கொண்ட திரிபீடகமும், பூகோளம், செடி, இயல் மருத்துவ இயல், உலோக இயல் பற்றிய ஏராளமான நூல்கள் இருந்தன.

சீனப் பயணி பாஹியான் இதுகுறித்து சொல்லியுள்ளார். இந்தியாவில் கிறிஸ்தவ தேவாலயங்களில் மதம் சார்ந்த நூல்கள் இருந்தன. ஏழாம் நூற்றாண்டில் பாட்னாவிற்கு தென்கிழக்கே நாளந்தா பல்கலைக்கழகத்தில் 68,700 பனை ஓலைகளில்

எழுதப்பட்ட நூல்களும், 36,058 பாபிரஸ்புல் சுருள்களில் எழுதப்பட்ட நூல்கள் இருந்திருக்கிறது. ஆனால் கிடைத்தது 3100 பனை ஒலைகள் மட்டுமே. இத்சிங் என்ற சீனப்பயணி குறிப்பில் இவைகளை அறிய முடிகிறது. சீனப்பயணி யுவான்சுவாங்கும் சமண சமய நூல்கலைச் சேர்த்து வைத்த இடங்கள் ஞான பண்டாரங்கள் எனப்பட்டன. புத்தமதம் 'செழுங்கலை நியமம்' என்றது.

வைணவம் ஞான பிரதிஷ்டை (அறிவு அமைப்பு) நூலக அமைப்பு பற்றிப் பேசுகிறது. ஸ்ரீரங்கம், காஞ்சிபுரத்தில் வைணவ நூல்நிலையங்கள் இருந்ததை கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. சைவ சமயத்தில் 'சரசுவதி பண்டாரம்' என்று நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் தேவார நூலகம் சான்று.

மெகலாய மன்னர்களின் காலமும் நூலகங்கள் வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றிய காலமாகும். அக்பர், ஜஹாங்கீர், ஷாஜகான் என்று தொடர்ந்து **ஔரங்கஜேப் அரசாங்க நூலகத்தைக் கணக்கற்ற புத்தகங்கள் வாங்கி வைத்து விரிவுபடுத்தியவர்.**

தஞ்சையை ஆண்ட மன்னர்கள் நாயக்கர்கள், மராத்தியர்கள், புதுக்கோட்டை அரசர், எட்டயபுரம் அரசர், பரோடா சமஸ்தான மன்னர் போன்றோர் நூலகங்கள் உருவாக்கிப் பேணி வரலாற்றைக் காத்தனர்.

இலாகூரில் 1890 இல் பிறந்து 1949 இல் பாகிஸ்தானில் மறைந்தவர் அசானுல்லா. ரோமன் கிறிஸ்தவக் கல்லூரி நூலகத்தில் 50 ரூபாய் சம்பளத்தில் பணியாற்றியவர். அலிகார் கல்லூரி (பின்னால் பல்கலைக்கழகம்) நூலகப்பணி, தில்லி அரசின் தலைமைச் செயலக நூலுகத்தைத்திருத்தி அமைத்தல், கல்கத்தா தேசிய நூலகத்தில் நூலகங்களுக்கான பயிற்சி பள்ளி நடத்தியது அசானுல்லா தான். சென்னையில் ஜனவரி 1928 இல் சென்னை நூலகச் சங்கம் நிறுவியவர் ராமாமிர்தம் ரங்கநாதன் நூலகத் தந்தை, இவரை மறந்துவிட முடியாது. அழியாமல் பல நூல்களைக் காப்பாற்றியதால் வரலாற்று உண்மைகளை எல்லோரும் அறிய முடிகிறது.

சென்னை மாகாண ஆளுர் (1886–1890) போபி இராபர்ட் போர்க்வெரன் கன்னிமாரா பெருமகனால் காலத்தால் அழியாத

கன்னிமாரா நூலகத்திற்கு தீர்க்கதரிசனத்துடன் அடிக்கல் நாட்டியவர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர் (1827–1902)

1890 மார்ச் 22 அடிக்கல் நாட்டினார். 14.4.1896இல் பொதுமக்களால் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டது. 5.12.1896இல் சர்ஆர்தர் எலிபங்க் ஹாவ்லாக் முறைப்படி திறந்தது கன்னிமாரா நூலகம்.ராஜாஜி, நீலகண்ட சாஸ்திரி, மயிலை வேங்கடசாமி, அறிஞர் அண்ணா உள்ளிட்ட எத்தனையோ மேதைகளை உருவாக்கிய அறிவுக்கூடம் அது. 1608 இல் வெளிவந்த பைபிள் இங்கு உள்ளது. ஜெய்ப்பூரின் மன்னர் ஜெய்சிங் 1696–1743 சிறந்த நூலகத்தை உருவாக்கினார். மைசூரில் மகராஜா சிக்க தேவராயர் (1672–1704) சிறந்த நூலகத்தை அமைத்தார். திப்பு சுல்தான் சிறந்த நூல் நிலையத்தை வைத்திருந்தார். தஞ்சாவூரில் சரபோஜி மன்னர்கள் முயற்சியில் 1820 தஞ்சை சரஸ்வதி நூலகம் உருவானது. 1929 லாகூரி பஞ்சாப் நூலகங்கள். 1936இல் பாட்னாவில் பீகார் இராஜ்ய புஸ்தகாலய சங்கம், 1939இல் கௌகாத்தியில் அசாம் இராஜ்ய நூலக சங்கம், 1944 பூரியில் உத்கல் நூலகச் சங்கம், 1945 திருவனந்தபுரத்தில் கேரள நூலகச் சங்கம் தோன்றியது. இவைகள் தவிர டெல்லியில் பாராளுமன்ற நூலகம் மிகப்பெரியது. அங்குள்ள அருங்காட்சியகமும் மிகப்பெரியது. 1980–1982 களில் டில்லியில் அவைகளைக் கண்டு மகிழ்ந்தவன் அடியேன்.

கேள்வி 14 : **இந்தியாவில் வலதுசாரி அமைப்புகளின் வளர்ச்சியை ஆய்வுசெய்யும்போது சீரான முன்னேற்றத்தை நோக்கை அது நகர்ந்து செல்கிறது என வெளிப்படையாகவே தெரிகிறது. இதற்கான வரலாற்று அடிப்படை என்ன?**

கேள்வியிலேயே முன்னேற்றத்தை நோக்கி நகர்ந்து செல்கிறது என்றீர்கள். உண்மைதான். உண்மைக்கு என்றும் அழிவில்லை, வாய்மையே வெல்லும்.

கேள்வி 15 : **வரலாற்று இயக்கத்தில் மதத்தின் பங்கு குறைவே, பண்பாட்டு கலாச்சார வெளிகளே முக்கிய காரணிகள் என்கிறார் Richard Eaton, சரியா?**

வரலாற்று இயக்கத்தில் மதத்தின் பங்கு குறைவு என்பது பாதி உண்மையாகும்.

ஆனால் உலக வரலாற்றைத் திருப்பிப் போட்டது சமய மறுமலர்ச்சிக் காலம் – அரேபியாவில் அண்ணல் முகம்மது நபி (ஸல்) அறியாமைக் காலத்தை எதிர்த்துப் புரட்சி செய்தது. எல்லாம் மதத்தின் அல்லது சமய மார்க்கங்களின் பங்குதானே! மார்ட்டின் லூதர் கிறிஸ்தவ மதத்தில் புரட்சி செய்து வரலாற்றைப் புரட்டிப் போடவில்லையா? தமிழகத்தில் இராமாநுசர், வள்ளலார் மதத்திலே புரட்சி செய்யவில்லையா? இவை எல்லாம் வரலாறு தானே.

கேள்வி 16 :**'Clash of Civilisation' 'பண்பாட்டு மோதல்' இந்தியாவிலும் தொடங்கிவிட்டதாக கருதுகிறீர்களா? காரணம் சமீபகாலமாக எல்லா குற்றச்செயல்களிலும் முஸ்லிம் தரப்பை நோக்கி கைகாட்டல் தமிழகத்திலும் பரவலாகி விட்டது. உதாரணம்: கடந்த ஜூன் 24-ந் தேதி நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் இளம்பெண்ணை வெட்டியவர் வெறும் யூகத்தின் அடிப்படையில் அவர் 'முஸ்லிம்' என பிரச்சாரம் செய்யப்பட்டது வரை. இதற்கான சமூகவியல் காரணியின் மூலம் எது?**

அண்ணல் காந்தியார் சுடப்பட்ட காலத்தை நினைத்துப் பாருங்கள். அதற்கு மேல் பதில் சொல்ல விரும்பவில்லை.

கேள்வி 17 : **'முகத்திமா' என்று உலக வரலாறு எழுதிய 'இப்னு கல்தூன்' (கி.பி.1332-1406) வரலாற்றெழுத்தியல், சமூகஅறவியல் கோட்பாட்டை உருவாக்கியவர் என்று ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார். அரபு மூலத்தை தழுவிய மொழிபெயர்ப்பு 6 தொகுதிகளாக உருதுவிலும், சுருக்கப்பட்டு 3 தொகுதிகளாக ஆங்கிலத்திலும் கிடைக்கிறது,. 6/7 நூற்றாண்டுகளுக்கு முன்பே மக்களை மையமாக்கி வரலாறு எழுதியவரை கண்டு வரலாற்று மாணவனாக வியக்கிறேன். தங்களின் கருத்து ஏதும்?**

IBU KHALDUN *இப்னு கல்தூன்* The Muqaddimah (An Introduction to History) *இதனை (சரித்திர முன்னுரை எனலாம்) அரபியில் எழுதினார். 1730இல் துருக்கியில் அதன் மொழிபெயர்ப்பு வெளியானது. பிரெஞ்சில் 1862, 1865, 1868 இல் வெளியானது. அடியேன்* Franz Rosenthal *மொழிபெயர்த்ததும்,* Nessim Joseph Dawood *சுருக்கியதுமான* Oxford Bollingen Series *வெளியீடு நூலை முதற்பதிப்பு 1967இல் வந்ததைப் படித்துள்ளேன். 465 பக்கங்களைக் கொண்டது அது. இஸ்லாமிய வரலாற்றை*

தனக்கே உரிய தனிப்பாணியில் எழுதிய திருச்சி ஸையித் இப்ராஹீம், இப்னுகல்தூன் பற்றி 1961இல் 68 பக்கங்களைக் கொண்ட நூலை எழுதியுள்ளார். அதையும் வாசித்ததாக ஞாபகம். தாங்கள் கேள்வியிலேயே சொல்லியதுபோல நானும் அவரது வரலாற்று ஆர்வங்கண்டு, திறமை அறிந்து வியக்கிறேன்.

உயர்ந்த குறிக்கோள் மக்களிடையே பரப்புவதே, மனிதத்தன்மையை உலகில் நிறுவுவதாகும் என்ற எண்ணங்கொண்ட நல்லெண்ணங்களை நெஞ்சில் உலவச்செய்த, நல்லொழுக்க நெறியில் நின்று தமது சொற்பொழிவுகளை மாணவருக்கு நிகழ்ச்சி நல்லொழுக்கம் கற்பித்த அந்த வரலாற்று ஆசிரியரை, மெய்ப்பொருளை உணர்த்தி, வாழ்வின் முற்போக்குப் பாதையில் நம்மை நடத்திச் செல்லும் பெரியாரை, சமூக நூல் ஆராய்ச்சியில் தனியான வேட்கைக் கொண்டும், அறிவுத்துறையில் ஆர்வமும், வாழ்வில் எளிமையும் எண்ணத்தில் உயர்வும் கொண்ட சமூகவியல் என்றும் உண்மையை உலகிற்கு உணர்த்தி உயர்ந்த இமயச்சிகரம் இப்னுகல்தூன்.

கேள்வி 18 : **அ.கா.பெருமாள், வேதசகாயகுமார், செ.இராசு, குடவாயில் பாலசுப்பிரமணியம், தொ.பரமசிவன், எஸ்.வி.இராஜதுரை என தமிழ்நாட்டு ஆய்வாளர்களின் பட்டியலில் ஒரு முஸ்லிமும் தென்படவில்லையே என இருந்த ஏக்கம் தங்களின் ஆய்வெழுத்துக்கள் போக்கியுள்ளன. இர்பான் ஹபீப், ரொமிலா தாப்பர் மாதிரி இங்கு யாராவது பேராசிரியர்கள் இருக்கின்றனரா?**

அ.கா.பெருமாள் எனது நண்பர். செ.இராசு நீண்ட வருடங்களாக எனது இனிய நண்பர். குடவாயில் பாலசுப்பிரமணியம் சரித்திர ஆசிரியர் திருவாரூர் கோயில், தஞ் சாவூர், கருணாகரத் தொண்டைமான், குடவாயிற் கோட்டம் ஆகிய நூல்கள் அவரது மேம்பட்ட சரித்திர அறிவிற்குச் சான்றுகளாகும். அவர்களிடம் அடியேனுக்கு பழக்கம் இல்லை. ஆனால் அவர்களது நூல்கள் வாசித்துள்ளேன்.

தொ.பரமசிவன் நான் வாழும் ஊரிலேயே எனது அருகிலேயே வாழ்ந்து வருபவர். பண்பாட்டு ஆய்வாளர் அடிக்கடி அவரிடம் பேசிப்பழகிடும் வாய்ப்பை பெற்றவன். எனக்கு மிகவும் வேண்டியவர் பிரபல ஆய்வாளர்

எஸ்.வி.இராஜதுரையை திறனாய்வுத் தென்றல் தி.க.சி. அவர்கள் இல்லத்தில் சந்தித்து மகிழ்ந்துள்ளேன். அவர்களது நூல்கள் விரிவான ஆய்வு நூல்கள் அவர்கள் இடத்தில் அடியேனையும் சேர்த்துள்ளீர்கள். அன்பினால், ஆர்வத்தால், காலம் எவ்வாறு நிர்ணயம் செய்கிறதோ எல்லாம் வல்ல இறைவன் அறிவான்.

இர்பான் ஹபீப்பின் பகத்சிங் புரட்சியின் காலகட்டம் நூலை வாசித்துள்ளேன். இன்னும் பல நூல்கள். சிறந்த சரித்திர மேதை ரொமிலா தாப்பர் Somanatha the many voices of a History *260 பக்கங்களைக் கொண்ட ஆங்கில நூல் 2004இல் வெளிவந்தது. அதில் பக்கம் 80இல் சோமநாதர் ஆலயம் கஜினி முகம்மதுவின் படையெடுப்பிற்கு முன்பே சிதலமடைந்தது பற்றி கூறுவார். தலைசிறந்த வரலாற்று ஆய்வாளர்கள் உள்ளதை உள்ளபடியே சொல்பவர்கள். தமிழகத்திலும் சில பேராசிரியர்கள் இல்லாமல் இல்லை. ஓரிருவர் பெயரை மட்டும் குறிப்பிட்டுவிட்டு ஏதாவது குறிப்பிட வேண்டிய பெயரை விட்டு விட்டால் பொல்லாப்பு. எனவே பெயர்களைச் சொல்லாமல் தவிர்க்கிறேன்.*

கேள்வி 19 : **அல்லாமா அப்துல் ஹமீத் பாகவிக்கு பிறகு, மௌலவி பி.ஜெ., மௌலவி அப்துல் காதிர் உமரி, டாக்டர் ஃபஸ்லுர் ரஹ்மான் என ஒரு சிலரே தனி நபர்களாக இருந்து திருக்குர்ஆனை தமிழ்மொழிபெயர்ப்பு செய்தது. அதை தவிர்த்து தமிழில் உள்ள இன்னபிற பத்துக்கும் மேற்பட்ட தமிழ்மொழிபெயர்ப்புகள் அனைத்தும் குறைந்தபட்சம் மூவருக்கும் அதிகமானவர்கள் முழுநேர மொழிபெயர்ப்பாளர்களாக இருந்து, அதை வேறொரு குழு சரிபார்த்து மொழிபெயர்த்து வெளிக்கொண்டு வந்துள்ளது. கடந்த 2015 ஆண்டு மத்தியில் அதிராமபட்டினத்தை சேர்ந்த மௌலவி முஸ்தபா அல்சிபாயி என்ற மூத்த ஆலிம் ஒருவர் தனியொரு நபராக இருந்து திருக்குர்ஆனுக்கு ஒரு மொழிபெயர்ப்பை கொண்டு வந்திருந்தார். அதிலுள்ள பிழைகளையும், தவறுகளையும் பெரிதுபடுத்தி (முஸ்லிம் முரசு) மாதஇதழில் தொடர்ந்து நான்கு மாதங்கள் மதிப்புரை, விமர்சனம் என்ற பெயரில் எழுதப்பட்டது. அனைத்தையும் ஒரு வாசகனாக நான் புரிந்து கொண்டு 'காழ்ப்புணர்வு' கொண்ட அவதூறு அதே போல,**

தாங்களே காழ்ப்புணர்வு, அவதூறு என்று சொன்னதற்குப் பிறகு வேறு என்ன சொல்ல இருக்கிறது.

கேள்வி 20 : உலகத்தில் பெரும் கல்வி நிறுவனங்கள் செய்துள்ள ஆய்வுகளை இந்திய முஸ்லிம்களில் சிலர் தனியொருவராக இருந்து சாதித்துள்ளனர். ஆனால் கொண்டாடத் தெரியாத சமூகம் இது என்று மௌலானா (1914-1999) அலிமியான் என்று அழைக்கப்பட்ட அபுல்ஹசன் நத்வி அவர்கள் கூறியதைப் படித்திருக்கிறேன். தாங்கள் நூறு நூல்களை எழுதியுள்ளீர்கள். அதுவும் அவை கற்பனை கதை போன்றவை அல்ல. ஆய்வுநிலைக்கான கடும் உழைப்பை கோரும் உயரிய எழுத்துக்கள். சமீபத்தில் வந்த நாகூர்ஹனீபாவின் நூலில் 'தகவல்' பிழையுள்ளதாக அதே (முஸ்லிம் முரசு) மாதஇதழ் எழுதியிருப்பதை கண்டு மனம் வெதும்பினேன். இதொரு நோய்மை, சீக்கு பிடித்த மனதின் விமர்சனம். அதை 70 ஆண்டுகளாக வெளிவரும் பத்திரிகையை நடத்தக்கூடிய நிர்வாகத்தினர் எப்படி அனுமதித்தார்கள் என்றே தெரியவில்லை. இதென்ன உளவியல். அதற்கு தாங்கள் அளித்திருந்த மறுப்பை போட்டுவிட்டு அடுத்த பக்கத்திலே இன்னொரு 'பத்தாம்பசலித்தனமான' வாசகர் கடிதமும் வெளியாகியுள்ளது விளக்கம் தரவும்?

பதில்: கடந்த 25 ஆண்டுகளாக எந்த பணிவாய்ப்பிற்கும் செல்லாமல் ஊதியம் எதுவும் பெறாமல் என்னால்ஆன பணிகளைச் செய்து வருகிறேன்.

இஸ்லாம் மார்க்கத்தைச் சேர்ந்த அடியேன் பட்டுக்கோட்டை அழகிரியையும் எழுதி உள்ளேன். வஉசி, பாரதி, கட்டபொம்மன் பற்றியும் எழுதியுள்ளேன். முகலாயர் காலத்தையும் எழுதி உள்ளேன். போர்ச்சுக்கீசியர்களின் காலத்தையும், குஞ்ஞாலிகள் (கடற்போர்த்தளபதிகள்) பற்றியும் எழுதியுள்ளேன்.

சுதந்திரப் போரட்ட வரலாற்றில் முஸ்லிம்கள் பங்களிப்பு பற்றி 2000 பக்கங்களுக்கு மேல் எழுதியும் இன்னும் 2000 பக்கங்கள் வரையில் இறைவன் நாட்டப்படி எழுதவும் இருக்கின்ற எளியேனை, முஸ்லிம் முரசு இதழ் விமர்சித்தது வேதனையைத் தந்தது. அதை எழுதியவர்கள் நன்றாக இருக்கட்டும்.

ஆனால் அபிவை தாஜுத்தீன் அண்ணன் 16.7.2016 அன்று அடியேனிடம் தொலைபேசியில் பேசி வாழ்த்து தெரிவித்தார்கள். கவிஞர் அதிரை தாஹா வாழ்த்துமடலை 25.7.2016இல் தந்துள்ளார்.

சீர்காழி இறையன்பன்
எனக்கு அண்மையில் வாழ்த்துப்பாவே
அனுப்பியுள்ளார்கள். அந்தப் பாடலைப் பாருங்கள்.

செ.திவான் சிந்தனையில் சிறந்தவர்!
செந்தமிழ் சிகரத்தைத் தொட்டவர்!
விந்தைமிகு செய்திகளைத் தொகுத்து தருபவர்!
நந்தவனப் பூங்காவாக நறுமணம் கொண்டவர்!
நலந்தரும் பண்புடையவர் நற்பாதையில் நிறைந்தவர்!
துலங்கிடும் வகையிலே தொலைநோக்கு பெற்றவர்!
விளங்கிவரும் நற்செயலால் வெற்றி கண்டவர்!
வளம்தரும் வரலாறுகளை நூலினில் வடித்தவர்!
அமிழ்தினும் உயரிய தனிமனிதராய் வென்றவர்!
தமிழகம் புகழ்ந்திட நூறு நூல்களை யாத்தவர்!
கமழ்கின்ற கஸ்தூரியாய் மனதைக் கொண்டவர்!
புகழ் கொண்ட இறையோனின் வழிபாதை கண்டவர்!
ஏற்றமிகு வாழ்வினையேபெற்ற நல்படைப்பாளர்!
ஊற்றென சுரந்திடும் ஆற்றலைப் பெற்றவர்!
தோற்றத்தில் எளிமையை தோழனாய்க் கொண்டவர்!
ஏற்றத்தில் இவர் ஏணி! கரைகடக்கும் நற்தோணி!
நெய்தலிலே பூத்தமலர் நிறைமணம் பெற்றதுபோல்
பெய்த மழையால் பாருலகம் செழிப்பது போல்,
நெய் மணக்கும் நெஞ்சம் கொண்ட செ.திவான்
வாய்ப்புகழ் அவரின் பெருமை வாழ்த்திடுவோம்!

இவைகள் புண்பட்ட நெஞ்சத்திற்கு
இதம்தரும் ஒத்தடங்கள், மருந்துகள்.
எனவே விமர்சிப்பவர்களைப் பற்றி
நான் அனுதாபம் கொள்கிறேன்.
பாவம் அவர்கள் அறியாமல் செய்கிறார்கள் என்று.

சுஹைனா பதிப்பகம்